திராவிடநாடு

இதயம்! இருவருக்கும் இல்லை!!

வாத்துக்கு, யோகம்!

நித்தம் நித்தம் நீராடி நெடுமால் அருளைப் பெறலாமேல், தத்தும் தவளை மீன்களெல்லாம் அத் தனிப்பேறடைய வேண்டாமோ? — என்று கேட்டார் மறைந்த கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள்! தத்தும் தவளைக்கு, வேறெவ்வித தனிப்பேறு கிடைக்காவிடினும், டாலர் நாட்டுக்குப் போகும் பாக்கியம் மட்டும் கிடைத்திருப்பதாகச் சின்னாட்களுக்கு முன்பு படித்தோம்—தவளை, நண்டு, இரு முதலியவைகளுக்கு மட்டுமல்ல, வாத்துக்கும் இப்போது யோகம் அடிக்கிறதாம்! வருக — கொண்டு வருக — என்று அமெரிக்கர்கள், கேட்கிறார்களாம். தவளையைக்கூட விடாதவர்கள், வாத்துக்களையா விடுவார்கள்? அதனால், அமோக விற்பனை ஏற்படும் எனக் கருதி கேரளத்தில் வாழ் வியாபாரிகள் எல்லாம், வாத்துக்களை வேட்டையாட கிளம்புகிறார்களாம்! சமீப காலத்தில் அமெரிக்கர்களுக்கு, வாத்து — நண்டு — தவளை இவைகள் மீது, அபார மோகம் ஏற்பட்டுள்ளதாம். வேறெதற்கு? தின்பதற்குத்தான் !!

மிளகு, இஞ்சி, முந்திரி, ஏலக்காய் முதலியவைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதில், முதலிடம் வகித்து வருகிறது கேரளம். இன்று நேற்றல்ல, பற்பல நூற்றாண்டுகளாகவே, வெளிநாடுகளில் கிராக்கி அதிகம். பிறகு, இரப்பர், காப்பி முதலிய தோட்டத் தொழில்கள் பெருகியதும், கேரளத்தின் ஏற்றுமதித் தொழில், இன்னும் வளரலாயிற்று. இப்போது, தவளை, வாத்து, நண்டுகளுக்கு யோகம் பிறந்திருக்கிறது !!

டாலர் வருமானத்தைக் குவிக்கக்கூடிய இவைகளுக்கு நல்ல வரவேற்பிருப்பதால், வியாபாரிகள், எவ்வளவு வாத்து கிடைக்கும், எத்தனை காலத்துக்கு கிடைக்கும், தொடர்ந்து கிடைத்திடச் செய்ய என்ன செய்யலாம் என்பது குறித்து, ஆலோசனையிலிறங்கி உள்ளனராம். கொச்சியிலிருக்கும் ஒரு ஏற்றுமதிக் கம்பெனி, இந்தத் துறையில், விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டுள்ளதாம். இப்போதுள்ள, கணக்குப்படி கேரளத்தில் 25 இலட்சம் வாத்துக்கள் இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது!! பல இடங்களில் கிடைக்கும் இந்த வாத்துக்களை வாங்கிக்கொண்டுபோய் கொடுக்கும் வேலையில், பலபேர், ஈடுபட்டிருக்கிறார்களாம்.

உலகிலுள்ள எப்பொருளும், ஏதாவது ஒருவிதத்தில் மனிதனுக்குப் பயன்படாமற் போவதில்லை! அவைகளைப் பயன்படுத்தும் முறையை தெரிந்துகொண்டால், எவ்வளவோ பொருள்கள் மனித உலகுக்கு, பயன்படக்கூடும்! நேற்று வரையில், தவளைக்கும் வாத்துக்கும் கிராக்கி ஏற்படும்—அதுவும் அமெரிக்காவிலிருந்து—என்று எவர் எண்ணியிருக்க முடியும் !!

★

உபதேசம்

கவலைப்படேல்! — என்கிறார், டில்லியின் திட்ட மந்திரி, நந்தா.

வறுமை! வேலையில்லாத் திண்டாட்டம்!!—இரண்டு பற்றியும், இளைஞர்காள், ஒரு சிறிதும் கவலைப்படேல் என்கிறார்.

இரண்டினையும் ஒழித்துக்கட்டும் உன்னதத் திட்டம் எதனையும் உள்ளத்தில் வைத்துக்கொண்டு, இவ்வித உபதேசத்தை, அருள்கிறாரோ என்று பார்த்தால், அது பற்றியதும் அவர் கூறவில்லை! எனினும், இளைஞர் உலகம் இரண்டு குறித்தும் கவலைப்படக்கூடாது, துணிந்து எதிர்த்து நிற்கவேண்டும் என்கிறார் !!

வறுமை கொடுமைக்குரியதுதான் — வேலையில்லாத் திண்டாட்டம் விரும்பக்கூடாததுதான்—இவைகளை ஒழித்துக்கட்டும் வேலைக்காக 6,000 - கோடி செலவிட நாங்கள் முடிவு செய்திருக்கிறோம், அஞ்சேல்! என்று அபயம் அளிக்கவேண்டிய அமைச்சர், உபதேசம் செய்கிறார் — இரண்டையும் எதிர்த்து நிற்கவேண்டியதுதானாம் !!

எதிர்த்து நிற்பதென்றால் எப்படி? — விளக்கவில்லை அவர்!

சோறு இல்லை—துணி கிடைக்காது—நடைபாதையே வீடாக இருக்கக்கூடும்—இந்த வறுமையைக் கண்டு அஞ்சாதீர்கள்! என்ன செய்துவிடும்? துணிகரமாக எதிாத்து நில்லுங்கள், என்றால் என்ன பொருள்?—வயிறு பசியால் துடிக்கும், வாடாதீர்கள், எதிர்த்து நில்லுங்கள் — துணியில்லாது துடிக்க நேரலாம், கவலைப்படாமல், இருங்கள் — என்றுதானே கருத்து. இப்படிக் கருத்துரையும் உபதேசமும் வழங்கத்தானா, இவர்களை அமைச்சர்களாகப் பெற்றோம்! எதிர்த்து நிற்கவேண்டுமாம்—என்னமோ, மாபெரும் எதிரி வருவதுபோலவும் — அவனை எதிர்க்கும் பட்டாளமாக இளைஞர்கள் உண்டு கொழுத்துக் கிடப்பதுபோலவும் கருதிக்கொண்டு உபதேசிக்கிறார். ஒவ்வொரு நாளும் கொஞ்சங் கொஞ்சமாகப் பசியாலும் அவதியாலும் சாகிறான், மனிதன்! அவன் தவிப்பு நீக்க இன்னின்ன திட்டங்கள் உண்டு என்று சொல்வாரா? உபதேசிக்கிறார், எதிர்த்து நிற்கவேண்டுமாம் எதிர்த்து!!

தியாக நாள்!

151 ஆண்டு சந்தா ரூ. 8 [14—7—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 52

வேலெறி படைகாள்! சூலெறி மறவர்காள்!
செற்றிடும் திறனுடைத் தீர ரத்தினங்காள்!
யாவரும் வாழிய! யாவரும் வாழிய!

எண்ணில துணைவர்காள், எமக்கிவர் செயுந்துயர்.
கண்ணியம் மறுத்தனர்; ஆண்மையுங் கடிந்தனர்,
பொருளினைச் சிதைத்தனர்; மருளினை விதைத்தனர்.

மொக்குள் தான் தோன்றி முடிவதுபோல
மக்களாய்ப் பிறந்து மடிவது திண்ணம்!
தாய்த் திரு நாட்டை தகர்த்திடுமிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமொன்றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற்றிருக்க எவன் கொலோ விரும்புவன்?
தாய் பிறன் கைப்படச் சகிப்பவனாகி
நாயென வாழ்வோன் நமரிலிங்குளனே'!

மராட்டிய மாவீரன் சிவாஜி, வீழ்ந்துபட்ட தமது மக்களைப் பார்த்து, வீர உணர்ச்சியையூட்டும் விதத்தில், பாடப்பட்ட கவிதை, இது தீட்டியவர், வேறு யாருமல்ல, கவியரசர் பாரதியார்!

என்ன, என்ன, இதோ வளம் குன்றி வாழ்விழந்து நிற்கும் தமிழ் மண்ணையும், அங்கு துயரிழைத்திடும் வடவரையும் குறித்துப் பாடியதுபோல்வனரே தெரிகிறது. என்று எண்ணத்தோன்றும். பாரதியார், சிவாஜியைக் காட்டி, வீழ்ந்துபட்ட மராட்டியத்தைக் காட்டி, அதன் மூலம் வீர சுதந்திரம் கோரி நின்ற காங்கிரஸ் தியாகிகளுக்கு எழுச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டினார், இக்கவிதைமூலம். அந்தக் கவிதை அதோடு முடிந்துவிடவில்லை! இன்று எடுத்துப்பார்த்தால், நம்மை வீழ்ந்துபட்ட மராட்டியரோடு ஒப்பிட்டு, பாடியது போலுள்ளது. உடனே தோன்றி உடனே அழியும் பொருள்பற்றிப் பாடவில்லை, கவியரசர்! உலகம் உள்ளளவும், எங்கெங்கு அடிமைத்தனம் இருக்குமோ, எங்கெங்கு அந்த அடிமைத்தனம் தளையொடித்து எழ வீறுகொள்ளுமோ, அங்கெல்லாம், வீரம் எழச்செய்யும் கருத்தே இக்கவிதை. அடிமை கொள்ள யார் முனைந்தாலும், அவருக்குப் பாடம் புகட்டும்! அடிமைப்பட்டோருக்கு, ஆர்வக்கனல் ஊட்டும்! மானம் ஒன்றிலாது மாற்றலர் தொழும்பராய், ஈனமுற்றிருக்க எவன்கொலோ விரும்புவன்? — ஒருவனைக் காட்டமுடியுமா! இயலாது, இயலாது. ஏனெனில், அவனவனும், சுயமரியாதையோடு, சொந்த நாடெனும் பெருமையோடு வாழவே ஆசைப்படுகிறான். அந்த ஆசைக்கு இடையூறு ஏற்படும்போது, அவனுள்ளம் கொதிக்கிறது — தாய்பிறன் கைப்படச் சகிப்பவனாகிடும், நாய் யார் உளன் என்று தளபதிகள் கேட்கும் கட்டம் உருவாகிறது.

உலகத் திரையில், இவ்விதம் கேள்வி எழுப்பி, விடை கண்டு புதிய தாயகம் பெற்ற நாடுகள் பலப்பல. வல்லான் பிடியில் சிக்கியோர், வலிவிழந்தவராயினும், துள்ளித் துடித்து சுதந்திரம் பெற விழையாமலில்லை! அடிமைத் தளையொடித்து, விடுதலை பெற அவர்கள் எல்லாம் சிந்திய குருதியினையும், இழந்த உயிர்களையும் கணக்கெடுக்க இயலாது!!

*

இதுகளா! — செச்சே, இதுகளால் என்ன இயலும்?—இதுகளை எவன் மதிப்பான்?—என்று கேலிக்கணைகளைத் தொடுத்து, அதன் மூலம் தமது ஆதிக்கத்துக்கு வேலி போட்டுக்கொள்ள முனைந்தோர், என்றும் பீடத்திலேயே இருந்ததில்லை. வீர உணர்ச்சி கொண்ட விடுதலை வீரர்கள் முன் சிரம் குனிந்து, மண்டியிட வேண்டிய கட்டம் ஏற்படவே செய்தது. செங்கோலேந்தியவனாக, சிம்மாசனத்திலமர்ந்து, வானை முட்டும் மாளிகையும், சேனைகள் பல வகையும் சீரும் சிறப்பும், பெற்று வாழ்ந்த பிரெஞ்சு நாட்டு மன்னன் விடுதலைத் தாகம் கொண்ட தனது மக்களால், பெற்ற பரிசு என்ன? இரண்டு துண்டாக்கப்பட்டான்! யாரார் அவன், பவனி வரும்போது, கைகட்டி வாய் புதைத்து நின்றனரோ, அதே மக்கள் அவனை பலிபீடத்துக்கு இட்டுச் சென்றபோது, கை தட்டியும், ஆரவாரம் செய்தும் ஆர்ப்பரித்தும் குதூகலம் காட்டினர். காரணம் என்ன? கொடுங்கோலன் ஒழிகிறான்! நாடு, நலம்பெறும் என்கிற ஆனந்தம்தான்! இந்தத் திருநாளுக்கு முதல் நிகழ்ச்சியாக வீறு கொண்ட விடுதலைப் படை, லூயி தன் ஆதிக்கத்துக்கான பாதுகாப்பு என்று கருதியிருந்த 'பாஸ்டில்' சிறையை ஜூலை 14-ந் தேதி, தூள் தூளாக்கி, பூபாளம் பாடிற்று! அந்த நிகழ்ச்சியைவிட, உன்னதமான ஒன்றை, சரிதத்தில் காணவியலாது. மணிமகுடங்களைவிட, மக்களின் எண்ணங்களே உலகத்தை ஆளும் என்று உலகுக்கு அச்செயல் மூலம் சேதி தரப்பட்டது! அந்த நாளை, இந்த உரிய எண்ணத்துக்கு கால்கோள் விழா செய்யப்பட்ட தினத்தை, ஜூலை 14-தேதியை பிரெஞ்சு நாட்டினர் மட்டுமல்ல, மக்கள் நலம் விரும்பிகள் ஒரு போதும் மறக்கார்,

மகேசனுக்கு அடுத்தபடியாகக் கருதப்பட்ட மன்னனின் சிரம்கொய்தனர், அடிமைத் தளைகளுக்கு ஆட்பட்டு, அடிமையாய், எடுபிடியாய் உழன்ற மக்கள். அதுபோலவே, இன்னொரு நாட்டாருக்கு அடிமையாகிக் கிடந்தவர்கள், அந்த அடிமைத் தளையை ஒடித்தெறிய என்னென்ன தியாகங்களைச் செய்தனர், என்பதை அறிய வேறெங்கும் போக வேண்டாம்—இந்தியத் துணைக்கண்டத்து விடுதலை வரலாறே தெரிவிக்கும். மணிமுடிகளையும் தகர்க்கும் சக்தி மனிதனுக்கு உண்டென்று 'ஜூலை-14' எப்படிக் காட்டுகிறதோ, அதுபோல 'ஆகஸ்டு 15-ம்' அடிமைகொண்ட நாடு வீறுபெற்றெழுந்து விடுதலை பெறும், என்பதை உலகுக்கு உணர்த்துகிறது.

தாய்பிறன் கைப்படச் சகிப்பவனாகி, நாய்போல் வாழ்வோன் யாரிருக்க முடியும்? அதனாலேயே, தாயகம் இன்னொருவனிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதை ஒருபோதும், சகிப்பதில்லை, சண்டமாருதமெனக் கிளம்பி, வீர முழக்கமிட்டு, வெற்றி பெறுகின்றனர், சுதந்திரம் விரும்பிகள்.

*

இதற்கு படைபலமும், பணபலமும் எப்போதும் தடையாயிருந்தும், பிரயோசனம் ஏற்பட்டதில்லை! துப்பாக்கியையும், பீரங்கியையும் ஆதிக்கம் செலுத்த நினைப்போர் நாடினாலும், அவை ஒருபோதும் மக்கள் தம் விடுதலைத் தாகத்துக்கு அணை போடப் பயன்பட்டதில்லை! வெள்ளம் போல் குருதி ஓடினாலும், மலையெனப் பிணங்கள் அடுக்கப்படினும், அவைகளுக்காகப் பயந்து மக்கள் தம் உரிமைப் போர் ஒருபோதும் அடங்கியதில்லை. ருஷ்ய நாட்டு ஜாரைவிடக் கொடுங்கோலன் இல்லை என்பர்! இன்று அந்த ஜார் எங்கே? ஒரு பிடி மண்ணானான்! அவன் எந்த மக்களைக் கேவலமாக எண்ணினானோ, அந்த மக்களின் கரத்தில், ஆட்சி இருக்கிறது!

இதுபோன்றே, அடுக்கடுக்கான சரித நிகழ்ச்சிகளை அறிந்தவர்கள் நாம் என்பதாலேயே, முதலாளித்துவ எடுபிடிகள் வீசும் கேலிக் கணைகளையும், அந்நிய ஆதிக்கம் வீசும் அடக்கு முறைப் பாணங்களையும் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படுவது கிடையாது—மொக்குள் தோன்றி முடிவதுபோல மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம், என்பதைத் தெளிவாக அறிவோம் நாம்!

இன்றைக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன், ஜூலை 15-ந் தேதி, முதலாளிகளுக்கு மோகனம் பாடுவதும், வடநாட்டு ஆதிக்கத்துக்கு வால் பிடிப்பதுமான காங்கிரசாட்சியால், நமது சகோதரர்களில் அறுவர், கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும், துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கப்பட்டனர். இதனால், நமது உரிமைப் போரை ஒழித்திடலாம் எனக் கனவு கண்டனர்! 5000-பேர், ஒரே நாளில், சிறைச் சாலைக்குள் கொண்டு பூட்டப்பட்டனர்! அறுவர் பிணமாக்கப்பட்டனர் எனின் நடைப்பிணமாக ஆக்கப்பட்டோர் தொகை நூற்றுக்கு மேலிருக்கும்! ஆறு மாதம்—மூன்று மாதம் — சொத்து பறிமுதல் போன்ற, அம்புகளும் வீசப்பட்டன. எனினும் என்ன? அழிந்துவிடவில்லை, திராவிட முன்னேற்றக் கழகம்! மாறாக வளர்ச்சியும் மலர்ச்சியும் பெற்று வாகை சூடிடும் பாதையில், நிற்கிறோம் இன்று! எந்தக் கரங்கள் துப்பாக்கித் தூக்கும்படிக் கட்டளையிட்டனவோ, அதே கரங்கள் நடுங்கியபடியே, நம்மிடம் 'சமரசம்' செய்ய வருவதையும் காண முடிகிறது.

*

ஒரே ஒரு நாள்! ஜூலை 15! அன்றுதான், ஏளனத்தாலும் அடக்கு முறையாலும் தி. மு. க.வை ஒழித்துவிடலாம் எனக் கனவு கண்டோர், நம்மையும் யார் என்று தெரிந்துகொண்டார்கள். பாஸ்டிலி, உடைபட்டதும் பதறினானே பிரெஞ்சு மன்னன்! அதுபோல, நாடு முழுமையும் இரயில்கள் ஓடாமல் நின்றதும், நம்மைப்பற்றிப் புரிந்துகொள்ளலாயிற்று காங்கிரஸ் அரசு!! ஜூலை 15-அன்று, ஒரு இடத்தில் அல்ல, மும்முனைகளில் அறப்போர், துவக்கப்பட்டது. ஒரு இடத்துக்கு இன்னொரு இடம் போட்டியாக விளங்குகிற அளவுக்கு, அறப்போர் இருந்தது. "அறுவரைப் பிணமாக்கினோம்! அனைவரை நடைப் பிணமாக்கினோம்! 5000-பேரைச் சிறைக்குள் தள்ளினோம்!" இனி ஏது, தி. மு. க? அவ்வளவுதான!! என்று இறுமாப்பு அடைந்தனர், காங்கிரஸ்காரர்கள் —இதோ 15-பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் அமைந்துள்ளார்கள். எறும்பு என்றும் துரும்பு என்றும் பேசிய ஆச்சாரியாரே, திராவிடநாடு கோரிக்கைக்கு வக்கீலாக மாறும் காட்சியைக் காண்கிறோம்.

*

அடக்கு முறையாலும், அசிரத்தையாலும் ஒரு தேசிய இயக்கத்தை அழித்துவிடமுடியாது. ஏனெனில், விடுதலைத் தாகம், ஏற்பட்டுவிடின், அதற்காக உயிரையும் ஒருபொருட்டாக மதிக்கமாட்டார்கள், கொள்கை வீரர்கள்.

இந்த உண்மையினையும், நமது பலத்தையும், ஆளவந்தாருக்கு உணர்த்திய ஜூலை-15 வருகிறது! இந்த நாளை, நாம் ஒருபோதும் மறக்கவியலாது—ஏனெனில் தி. மு. கவின் வரலாற்றில் அது ஒரு தியாக தினமாகும்! அந்த நாளில், நமக்காக, உயிரையிழந்த உத்தமர்களுக்கும், காலிழந்தும் கரமிழந்தும் கட்சி வளர்ச்சியே பெரிதெனவாழும் வீரர்களுக்கும், நமது மரியாதையைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அரசியல் — பொருளாதாரம் — சமூகம், இம்மூன்று துறைகளிலும் விடுதலையைக் காணப் போராடுகிறது, திராவிட முன்னேற்றக் கழகம். அரசியல் விடுதலை வேண்டும் என்பதில் அசையாத உறுதியுடனிருக்கிறோம்.

ஆதிக்கத்துக்கு ஆட்பட்டுக் கிடக்கும் எந்த நாட்டையும் நீண்ட காலத்துக்கு அடிமைப்படுத்திட இயலாது — தாய்பிறன் கைப்பட சகித்திடும் நாயென வாழ்வோரும் இருப்பரோ—என்று கூறுகிறார், தேசியக்கவி!! எனினும், இன்று கொழுத்த ஏகாதிபத்தியமாக உருவாகிவரும் டில்லி நமது சுதந்திரக் கோரிக்கையை ஏற்க மறுக்கிறது. அதன் தலைவரான நேருபண்டிதர் அகில உலகமும் சுற்றி வருகிறார் — ஆலந்து நாட்டின் வரவேற்பில் பேசுகிறபோது, "முப்பதாண்டுகளுக்கு முன் இந்நாட்டுக்கு ஒருதடவை வந்திருக்கிறேன். ஆனால், இந்த 30-ஆண்டுகளில் உலகில் எவ்வளவோ மாற்றங்கள் உருவாகிவிட்டன!" என்று வியந்து கூறியிருக்கிறார். முப்பது ஆண்டுகள் என்ன, கடந்த ஆண்டு ஒளியிலா நாடாகயிருந்த கனா இன்று சுதந்திரம் பெற்றுவிட்டது—அதன் பிர

(13-ம் பக்கம் பார்க்க)

அழைப்பு விடுக்கிறார்!

அரங்கண்ணல்

கச்சை கட்டி, கட்கம் தாங்கி, புயல் எனப்பாய்ந்து, போராடிய வீரன், கொஞ்ச நேரம் சென்றதும் எதிரியைப் பார்த்து, "இரு அப்பனே! இதோ, மூலைக்கடைக்குப் போய் அப்பமொடு அவல் பொரி கொண்டு வருகிறேன். அது ருசியாயிருக்கிறதா, என்று பார். பிடித்தால், சண்டையை விட்டு விடு! பிடிக்கவில்லையானால், போடு—நான், தயாராயிருக்கிறேன்!" என்று கெஞ்சினால், என்னவென்று சொல்வீர்? இவன், ஏன் இவ்வளவு ஆர்ப்பரித்தான்—கண்களை உருட்டிக் காட்டி மிரட்டினான்— வாளையும் வேலையும் சுழற்றினான்—வந்தாயானால், பார் ஒரே குத்து! என்று கூவினான், இப்போது கொஞ்ச நேரம் ஆவதற்குள்ளாகவே, சமரகீதம் பாடி, அவல்பொரி கொண்டுவந்து தருகிறேன், அது நன்றாகயிராவிடில் பிறகு சண்டை போடுவோம் என்றழைக்கிறான், இதென்ன புதுமையினும் புதுமையாக உள்ளதே, என்று வியப்பும் திகைப்பும உருவாகுமல்லவா? அதைப் போலவேயிருந்தது, 'கனம்' நிதியமைச்சர் **பத்தாண்டுக் காலம் சமாதானஒப்பந்தத்துக்கு** நம்மை அழைத்த செய்தியைக் கண்டபோது!

ஏறாத மலையெல்லாம் ஏறி, பாராதோர் முகம் எல்லாம் தேடி, பாராளும பாமாவளியைப் படித்து கையைப் பிடித்து, கெஞ்சி கூத்தாடி நம்மைத் தேர்தலில் ஒழிக்க எவரெவர்களுடைய உதவியாயினும், அது எந்த வகையின்தாயினும், நம்மை எதிர்க்கப் பயன்பட்டால் போதும என்று கருதி அமைச்சர் சுழாம் வலம் வந்த நாட்கள் ஓடிவிடவில்லை! மேடை தோறும் ஏறி நின்று, இந்த திராவிடர்களா, அய்யோ தேசத்தைப் பிரிக்கச் சொல்லும் பாதகர்களாச்சே, தெய்வக் கோயில்களை இடிப்பேன் எனபவர்களாச்சே, பாரதமாதவை துண்டாடச் சொல்லும துன்மார்க்கர்களுக்கா ஓட்டு, போடுவீர் அவருக்கு வேட்டு, என்று எழுப்பிய முழக்கங்கள், இன்னும் காற்றோடு மறைந்துவிடவில்லை! இதற்குள், ஏனிந்த சுப்பிரமணியனார், இப்படியோர் ஒப்பந்தம் கேட்கிறார்—இந்த இரண்டு மூன்று திங்களுக்குள் என்ன மனமாறுதல் ஏற்பட்டுவிட்டது — என்பது போன்ற எண்ணங்கள், எழுகின்றன மனதில். அமைச்சர் சுபபிரமணியமும் சரி, அவரது சகாக்களும் சரி, திராவிடநாடு என்றாலேயே தமக்குப்புரியாததொன்று போலும், திராவிட முன்னேற்றக் கழகம என்றாலே அரசியல் இயக்கம அன்று போலவும், இது நாள் வரை, ஏசியும் பேசியும் வந்தவர்கள். அவர்கள், இப்போது, அழைக்கிறார்கள்! அதுவும், எதற்கு? பத்தாண்டுக்கால ஒப்பந்தத்துக்கு!

ஆச்சரியமும் திகைப்பும் அலைமோதக் காரணம், இரண்டு சட்டசபைக கூட்டத்திலேயே, இவ்விதம் அழைப்பு விடும் கட்டத்துக்கு அமைச்சர்பிரான் வந்தது தான. இவ்விதம் அழைப்பு நமக்கு விடப்பட்டதை, நாம சட்டசபை புகுவதையே பஞ்சமா பாதகங்களில் ஒன்றெனக்கருதி, "இதுகள் எதற்குப் போகின்றன அசெம்பிளிக்கு?" என்று ஆரம்பித்து, "பொறுக்கித் தின்க!" என்று உடனே முடிவுரையும் கூறி, "முடியாது! முடியாது! இவர்களில் ஒருவரைக்கூட ஜெயிக்க வைக்கப போவதில்லை! ஒரு லட்சம் 'பிட்' நோட்டீஸ் ரெடி — ஆயிரம், ஆறு ரூபாய்-வாங்கி ஓட்டுங்கள் வீடெல்லாம்! என்று விளம்பரம் போட்டு, வானும், காருமு, பெட்ரோலும், அதற்கு மேலான பணநாதனும் பெற்று பவனி வந்து, இருந்தும் 15-பேர் வெற்றிபெற்றனர் எனும் செய்தி தேள்போல் கொட்ட "பதினைந்து பேர்! பதினைந்தே பேர்! என்ன சாதிக்கப் போகிறார்கள்? வெண்டைக்காயா சாதிக்கப் போகிறார்கள!" என்று சபித்தவர்களுக்கு நிச்சயம் ஒரு பேரிடியாயிருக்கும் இது. ஏனெனில், அமைச்சர் விடுத்த அழைப்பினால் நமது தகுதி விளக்கம் தரப்பட்டிருக்கிறது என்பது நம்மைவிட, அவர்களுக்குப் புரியும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியம், இதுவரை புரியாதவர்கள் போலிருந்தனர், அமைச்சர்கள். இப்போது, குரல் ஒலிக்கிறது, அதுவும் எதிரிலேயே ஒலிக்கிறது! வெறும் ஒலியாயிருந்தாலும் ஒதுக்கிவிடலாம்! இதுவோ, நியாயமும் நீதியும் நிரம்பியதாகக் ஒலிக்கிறது--காது வழியாக, இருதயத்துக்குள் புகுந்து மனச்சாட்சியையும் மன்றே குத்தாமல் குத்துகின்றது—என் செய்வது? எனும் கவலைக் குறியாலேயே, கனம் அமைச்சரவர்கள் பத்தாண்டுக் காலத்தின் துணையை நாடுகிறார்! இந்தப் பத்தாண்டுகளில் டில்லியின மூலம் நன்மைகள் கிடைக்கிறதா இல்

லையா என்று பார்ப்போம்—கிடைக்கவில்லையானால், அதற்குப் பிறகு பார்த்துக்கொள்வோம் — இபபோது சும்மாயிருங்கள், என்று கேட்கிறார்!! அமைச்சரின் அழைப்பில், ஆத்திரம் மறைந்து, அன்பும் குழைவும் கலந்திருப்பது, தெரிகிறது—அதற்காக ஆயிரம் நன்றிகள்! — ஆனால், இந்தக் குழைவும் அன்பும் அப்பமொடு அவல்பொரி கொண்டுவருகிறேன் என்பதும், எதனால் ஏற்பட்டன? யாரால் இந்த மனநிலை அவருக்கு உண்டாகியிருக்கிறது? இவ்விதம் எண்ணும் போதுதான், அந்தப் பதினேழு இலட்சம் ஓட்டர்கள் நம கண் முன்னால் தெரிகிறார்கள். அவர்களின் 'வாக்கு'களைப பெற, பம்பரம்போல சுழன்று, கருத்துக்களைச் சொல்லிப் பாடுபட்ட கழக வீரர்கள், தோன்றுகிறார்கள். நமது கழகச் சார்பில் போட்டியிட்டவர்களுக்கு வாக்களித்த இந்தப் பதினேழு லட்சம் பேருக்கும், நமது அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள வேண்டியவர்களாகிறோம, இச்சமயத்தில்,

பதினைந்தே பேர், என்ன செய்யப் போகிறார்கள ? — கேட்கப்பட்டது, கேள்வி.

இதோ, செய்யவேண்டியதை செய்கிறார்கள் ! — பதில் தரப்படுகிறது, கனம் அமைச்சரால்.

அரசியல் வரலாற்றில், இங்ஙனம் அழைப்பு விடப்படுவதெனபது, சாதாரணமானதல்ல. நமக்குத் தெரிந்தவரை, இந்திய உபகண்டத்தில், இப்படியொரு அழைப்பு, அடிக்கடி, ஜின்னா அவர்களுக்குத்தான், தேசியத் தலைவர்களால் விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. தேசம் சுதந்திரம் பெறட்டும — பிறகு, பார்த்துக்கொள்ளலாம் — அதுவரையில் பாகிஸ்தான் என்கிற பேச்சு வேண்டாம், என்று சொன்னார்கள்.

சேலத்து இரும்புக்கும், நெய்வேலி நிலக்கரிக்கும், நெல்லை சிமெண்டுக்கும, சுப்ரமணியனா எசமான்? கிடையாதே! டில்லியிடமிருந்து ஒரு உத்திரவில்லாமல், இவர் எதையும், தோண்டியெடுக்க முடியாதே — என்ன கதி யாவார், சுப்பிரமணியம்? தெரியாதா, நமக்கு! இலங்கைக்கு, இரண்டாயிரம் வேட்டிகளை அனுப்பி விற்றுவிட்டு, அங்கிருந்து ஒரு ஆயிரம் படி அரிசியைக் கொண்டு வர முடியுமா, கனம் சுப்பிரமணியத்தால்.? நிதி அமைச்சர், நமக்குத்தானே ஒழிய, டில்லிக்கு இவர் ஒரு எடுபிடி! மாகாணக் கஜானாவுக்கு ஒரு காவலர்போல!! தெரியாதா நமக்கு? அறிவோம், நன்றாக — இப்படி, அவதிப்படும் இவரின் திண்டாட்டம் போக்கி, பொறுப்பும் சிறப்பு மிகுந்த நிதிஅமைச்சராக இவர் விளங்கவேண்டும் என்பதற்காகத்தான், நாம் திராவிட நாடு கேட்கிறோம்—கோட்டைமீது கொடி கட்டி அங்கேயிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே ஆளவேண்டும் எனபதற்காக அல்ல. இதனை, ஆயிரமாயிரம் பொதுக் கூட்டங்களில் சொல்லியிருக்கிறோம் — அப்போதெல்லாம் அமைச்சர், வெற்றுரை என்று எண்ணிப் பேசாதிருந்தார் —இப்போது **பதினேழு இலட்சம் ஓட்டர்கள்** தெரிகிறார்கள, கண் முன்னால்—15 தி. மு. க. பிரதிநிதிகள் தென்படுகிறார்கள்-பார்க்கிறார்! பழி சொல்ல இயலாத பேச்சைக் கேட்கிறார்!! ஐயய்யோ, மோசம் போய்விட்டோம்—இவர்கள் குரலில் வலிவு மட்டுமல்ல, தெளிவும் உள்ளது—தெளிவும் வலிவும நிச்சயம் இவர்தம் இலட்சியத்தை நிறைவேற்றவே செய்யும்—எனினும என் செய்வது? — நேரு பிரான் உள்ளாரே—அவருக்காக வாவது, நாம் ஏதாவது பதில் சொல்ல வேண்டாமா என்று எண்ணுகிறார்! என்ன பதிலைச் சொல்லுவது? எவர் பேசியதை மறுபபது? வேண்டுமானால், சட்ட**சபையில் உங்களுக்குப் பேசத் தெரியவில்லை** என்று பொதுவாகக் குற்றம் சுமத்தலாம். அதையும் சுமத்தியாயிற்று-அதற்குப் பிறகு என் செய்வது? **புள்ளி விபரங் காட்டுங்கள்**, என்னலாம்! புள்ளி விபரமும காட்டுகிறார்கள் — சர்க்கார் புள்ளி விபரமாவது புரியாது, இதுவோ புரியும்படியாகவும் இருக்கிறது—என்ன செய்வது? என்றெல்லாம் யோசித்த பிறகே, இந்த அழைப்பை விடுத்திருக்கிறார், அமைச்சர்.

ஏன், இவ்விதம் பத்தாண்டுக் காலம் கேட்கிறார் அமைச்சர் என விளங்கவில்லை! பத்தாண்டுகள் வேண்டுமாம் — ஓரிரு ஆண்டுகள் பொறுங்கள், இந்த யுத்தத்தை முடித்துவிட்டு வருகிறேன், என்றான் வெள்ளைக்காரன் — பொறுக்கவில்லை, பொங்கி எழுந்தனர், காங்கிரஸ் தலைவர்கள். அவர்களின் கண் பார்வையிலிருக்கும் கனம் சுப்பிரமணியம், பத்தாண்டுக் காலம் கேட்கிறார்! இதோ ஒருவர், காலந் தாழ்த்தினால், விபத்து விளையும் என்கிறார்!!

தில்லிக்கும் சென்னைக்கும் 1361. மைல். தில்லிக்கும் கல்கத்தாவுக்கும் 956-மைல். தில்லிகரும் அஸ்ஸாமுக்கும் உள்ள இடைவெளி சொல்லத் தேவையில்லை. அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்துப் பிரதேச அரசாங்கங்களுக்குச் சுதந்திரம் தாராளமாகக் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்பது —வெள்ளிடை மலை.

கூறுகிறார், இன்னொருவர் இவ்விதம! வெள்ளிடை மலை — என்கிறார்! அதிகாரத்தைப்பிரித்து பிரதேச அரசாங்கங்களுக்குக்கொடுத்துத்தான் — தீரவேண்டும் என்கிறார்!

வெகு தூரத்திலிருந்து நடத்தப்பட்டு நடைபெறும் நிர்வாகத்தில் பல குறைகளை மக்கள் காண்பார்கள். நம்முடைய பிரதேசத்தை நாமே நடத்தலாமே என்ற ஆங்கார வேகமும் இத்துடன் சேரும். இரண்டும் சேர்ந்து தனிராஜ்ய மனோபாவத்தை வளர்க்கும்.

தனி ராஜ்ய மனோபாவம் வளரச் செய்யுமாம — வெகுதூரத்திலிருந்து, அதாவது டில்லியிலிருந்து நடைபெறும் நிர்வாகம், குறையுடன்தான் இருக்குமாம். கூறுகிறவர், யார்? டில்லியை அறியாதவரல்ல! நன்றாகத் தெரிந்தவர் — சுப்பிரமணியனாரை விடத் தெரிந்தவர்!

எவ்வளவு காலம் வரையில் தற்போதைய மத்திய ஆட்சியில் தலைசிறந்து விளங்கும் மகான்களால், பிரிவு மனப்பான்மையை இழுத்துப் பிடித்துக் காரியம் நடத்த இயலும். அப்படிச் செய்தாலும், அவர்களுக்குப் பின், வருங்காலத்தில் அரசியல் பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு அந்தச் சக்தி இருக்குமா என்பது சந்தேகம். பெரிய பாண்டம்செய்து அது உடைந்துபோன பின் கவலைப்படுவதைக் காட்டிலும் சிறு பாண்டங்களாகவே செய்து முடிப்பது நலம்.

காலம் கேட்கிறார், சுப்பிரமணியம்! கருத்துத் தெரிவிக்கும் இவர், எவ்வளவு காலம் இயலும் எனக் கேட்கிறார்! உதாரணமும் வேறு வழங்குகிறார்! பெரிய பாண்டமம்—அகண்ட பாரதம். அதற்குப் பதில்! சிறுசிறு நாடுகளாக இருந்தால் என்ன என்று கேட்கிறார்! ஏன் இப்படிக் கூறுகிறார் தெரியுமா?

தற்போது பிரதேச ராஜ்யங்களின் அதிகாரங்களையெல்லாம் கேந்திர ஆட்சிக்கு உறிஞ்சிக்கொள்ளும் நடவடிக்கைகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

பத்தாண்டுக் காலம், கேட்கிறார் அமைச்சர்! ஐயகோ, நடவடிக்கைகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றனவாம் பிரதேச ராஜ்யங்களின் அதிகாரங்களையெல்லாம் டில்லி உறிஞ்சிக்கொண்டு வருகிறது என்று எச்சரிக்கிறார், இவர். யார் இவர்—இவ்வளவு கடுமையாக டில்லி பீடத்தைத் தாக்குகிறார் என்று கேட்கத் தோன்றும். வேறு யாருமல்ல, சாட்சாத் ஆச்சாரியார் தான் 7—7—47 கல்கி இதழில் இவ்வண்ணம் எழுதுகிறார்!

ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று போட்டுக்கொண்டு ஒவ்வொரு சிறு காரியத்துக்கும் கட்சிக்காரர்களும் மந்திரிகளும் மாதம் தவறாமல் விமானம் ஏறி தில்லிக்கு விண்ணப்பதாரர்களாகச் சென்று வருகிறார்கள்.....

......இன்னும் சில நாள் கழிந்ததும் விற்பனை வரியும் சந்தோஷமாக மத்திய அரசாங்கத்துக்குக் கொடுத்து விடப்படும் என்று எதிர்பார்க்கலாம். நிலவரியும் மாறுதல் அடையும். எண்ணெய்க்கும் புகையிலைக்கும் மில் துணிக்கும் வரிபோடுவதுபோல் எல்லாச் சாகுபடி பயிர்களுக்குமே மத்திய ஆட்சியே இனிமேல் வரி போட்டுக்கொண்டு பிரதேச நிர்வாகத்துக்காக 'பட்ஜெட்' போட்டு மான்யங்கள் தரும் காலமும் சீக்கிரம் வரும்......

எழுதுகிறார், ஆச்சாரியார்! சுப்பிரமணியனாரைவிட, டில்லியையும் அரசியல் இயந்திரத்தையும் அறிந்தவர் — வருவதை அறிபவர் என்று அவர்களால் போற்றப்படுகிறவர், இவ்வளவு ஆபத்துக்கள் டில்லியால் வரவிருக்கின்றன என்கிறார்!! இப்படி வரவிருக்கும் ஆபத்து, பிரதேச மந்திரிகளுக்குத் தெரியுமா, தெரியாதா என்று அறிய விரும்பலாம் அல்லவா, நீங்கள்.

இதன் விளைவை உணர்ந்த பிரதேச மந்திரிகள் எடுத்துச் சொல்லி விவரிக்கக் கூச்சப்பட்டு விட்டுக் கொடுத்து வருகிறார்கள்.

இதன் விளைவை சுப்பிரமணியம் போன்றோர், உணராமலில்லை! ஆனால், விவரிக்கக் கூச்சப்பட்டு விட்டுக் கொடுத்து வருகிறார்கள் —இந்த வேதனையோடு, நம்மையும் பத்தாண்டுகளுக்குச் சும்மாயிருக்கச் சொல்கிறார் சுப்பிரமணியனார்!! அப்படியிருப்பது, ஆபத்து எனகிறோம — 'ஆம்' என்கிறார், ஆச்சாரியார்—எதிர்காலத்தில் அனர்த்தத்தில் முடியும் என்கிறார்—எல்லா வருவாயும் செல்வாக்கும் உறிஞ்சித் தில்லியில் சேர்த்துக்கொண்டு பிரதேச சர்க்காரை ஜில்லா போர்டைப்போல் ஆக்கிவிடுவது நல்ல அரசியல் திட்டமாகாது—நாமல்ல, ஆச்சாரியார் கூறுகிறார் இவ்விதம்! அமைச்சர் சுப்பிரமணியம் சமாதான ஒப்பந்தத்துக்கு அழைத்தபோது ஏற்பட்ட ஆச்சரியத்தைவிட இது பன்மடங்காகயிருக்கிறது. ஆச்சாரியார், எச்சரிக்கிறார்—ஆபத்து வரும் என்கிறார்—அனர்த்தத்தில் முடியும் என்கிறார் — தில்லி கொழுக்கிறது எனக் கூறுகிறார் —சிறு சிறு ராஜ்யங்கள் நல்லது என்றும் தெளிவாக்குகிறார் — ஆனால், அவரது சீடர் எனக் கூறிக்கொள்வதில் பெருமைப் படும் நிதி அமைச்சரோ, பத்தாண்டுக் காலம் சமாதான ஒப்பந்தம் கேட்கிறார்!! ஏனிப்படிக் கேட்கிறார்? இவர் அறியாரோ, டில்லியால் வரும் ஆபத்துக்களை என்று கேட்டால், ஆச்சாரியார் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

பிரதேச மந்திரிகள், விவரிக்க கூச்சப்பட்டு, விட்டுக் 'கொடுத்து வருகிறார்கள் !!

எப்படி நியாயம்? விட்டுக் கொடுத்து வருகிறார்களாம்! எதனை? டில்லியால் வரும் ஆபத்துக்களை! இந்த இலட்சணத்தில், **டில்லியின் அக்கிரமத் தர்பார்களை அனுதினமும் எதிர்க்கும், நாம் பத்து ஆண்டுக் காலம், மூல முழக்கத்தை விட்டு சும்மாயிருக்க வேண்டுமாம்!**

ராஜ்யங்களின் சுதந்திரத்தை இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் மறுக்கவில்லை. ஆனால், சமீபத்தில் அந்தக் கொள்கை செல்லரித்த ஓலையாகி வருகிறது.

இதுவும், ஆச்சாரியார் கூறுவதுதான்! மாநிலங்களின் அதிகாரம் செல்லரித்த கொள்கையாகி வருகிறதாம்! இப்படிப்பட்ட டில்லியின் ஆட்சியால், நமக்கு என்ன நீதி கிடைக்கமுடியும்? ஏற்கனவே, சோக சாகரத்தில் அமிழ்ந்து கிடப்பவர்கள் நாம்! இந்த சமயத்தில், ஒருபத்து ஆண்டுகள், வாளாயிருந்துவிட்டால்...? நாடு, பாலைவனம்தான் பிறகு!!

அழைப்புக்குக் காரணம் என்னவாயினும் சரி, இதன் மூலம் அமைச்சர் மனம் விளங்கிவிட்டது நமக்கு. ஆச்சாரியார் கூறுவது போல, டில்லியின் அக்கிரமத்தையும், தனிநாட்டுக் கோரிக்கையிலுள்ள வலிவையும், ஒவ்வொரு அமைச்சரும் உணராமலில்லை. என்றாலும், வெளியே கூற, வெட்கப்பட்டு, இப்படியெல்லாம் பேசுகிறார்கள்!!

இந்த உண்மை, வெளிவந்தது' பெரியதோர் வெற்றி எனலாம். இலட்சிய முழக்கத்துக்குக் கிடைக்கும், வெற்றியாகும் இது. தொடர்ந்து நமது இலட்சிய முழக்கம் கேட்குமேயானால், அமைச்சர், பத்தாண்டுகள் என்பதை ஐந்தாக்கிப் பிறகு ஒன்றாக்கி கடைசியில், 'சரி! நமக்குள் ஏன், பலப்பரீட்சை? இரண்டு பேருமாகச் சேர்ந்து எதிர்ப்போம் டில்லியை!! என்று வராமல்போக மாட்டார். ஏனெனில், குருநாதர் குரலிலேயே, துணிச்சல் தொனிக்கிறது! சீடரும், இன்னும் கொஞ்ச காலத்தில், துணிச்சல் பெறுமலா போவார்! ★

என்ன விசித்திரமான உலகம் இது! நாம் மௌனமாயிருந்தால் பிறர் நம்மை மூடனே என்று சந்தேகிக்கிறார்கள்; இல்லையென்று பேசத் தொடங்கினோமானால் அவர்கள் சந்தேகம் எல்லாம் தீர்ந்துவிடுகிறது! **ரீடர்ஸ் டைஜெஸ்ட்.**

"உண்டி சுருக்குக!"

[எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ.]

"ஐந்தாண்டுத் திட்டம் அவலம் போக்கும், ஆனந்தம் ஊட்டும்—வறுமையைப் போக்கிடும்,. வாட்டத்தை நீக்கிடும்—என்றெல்லாம் புகழ்ந்தீர்கள். ஆனல் அது, எம்மனோருக்கு — ஏழை எளியவருக்கு — எந்தவித நன்மையும் தரவில்லை. இதை நிறைவேற்றிடவா புது வரிகளைப் போடுகின்றீர்கள்? எங்கள் வரிபபணம், அரசாங்கத்தாரின் ஆடம்பரச் செலவுகளுக்கும்—அன்னிய நாடு சென்றிருக்கும் தூதுவர்களின் உல்லாச வாழ்வுக்கும்—இன்பபுரியை எட்டிட எத்தனிக்கும் முதலாளிகளுக்குத் துணை செய்யவும தான் பயன்படுகிறது! இப்படியிருக்க நாங்கள் எப்படி புதுப்புது வரிகளைத் தாங்க முடியும்? எங்களைப் பார்த்தல்லவா அறைகூவல் விடுகின்றீர் 'உண்டி சுருக்குக' என்று! எங்களிடம் என்ன இருக்கிறது சுருக்கிட! இருப்பதெல்லாம் இடுப்புக்கு ஒருமுழத் துணி எங்கள் வயிறு தரும் தொல்லையைத் தீர்த்திடும் மருந்தென நாங்கள் போற்றி வரும் அரைமுழ ஈரத் துணி தானே! எதை சுருக்கிக் கொண்டு, உங்கள் மேலான திட்டத்திற்கு உதவ முடியும் எங்களால்? பஞ்சையாய்—பராரியாய்—பசிக்கொடுமை அளவுக்கு மீறி வாட்டும்போது பெண்டு பிள்ளை என்னும் பாசத்தையும் துறந்திடும் துறவிகளாய்—பிச்சை யெடுப்பவராய்—கிடைத்த கஞ்சியைக் கொண்டு வயிற்றை அடைத்து மகிழ்ந்திட முயல்பவராய்—இப்படி யெல்லாம் இருந்த நிலைகூட மாறி இப்போது ஈரத் துணியினை நாடி "ஈசனே! எம்மைக் காத்தருள்க." என்று வேண்டி வரம் பெற்று உயிர் பிழைத்துள்ளோம்! எங்களைப் பார்த்து உண்டிசுருக்குக—வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்துக் கொள்க — என்றெல்லாம் அறைகூவல் விடுகின்றீரே, இது அடுக்குமா?" என்று ஏழையர் குமுறுவதை எடுத்தியம்பின எண்ணிறந்த கட்சிகள்! நெகிழ்ந்ததா நேருப பெருமகனாரின் நெஞ்சம்? முடிசூடா மன்னராயிற்றே அவர்! அவ்வளவு எளிதிலா இயைந்துவிடுவார்!

இந்தக்குரல்தான் அவர் காதில் விழவில்லை—கவனத்தை ஈர்க்கவில்லை—கருத்தை மாற்றவில்லை! பாராளுமன்றத்திலே வழங்கப்பட்ட கருத்துரைகள் கூடவா பயனற்றுப் போகவேண்டும?

"திட்டத்தினை நிறைவேற்றுவதில் அவசரம் வேண்டாம! தேவையானல் திட்ட காலத்தை ஓரளவு ஒத்திப் போடுங்கள். 'ஆறு ஆண்டுகளிலோ, அவசியமானல் ஏழு ஆண்டுகளிலோ திட்டம் நிறைவேற்றப்பட்டாலும் குற்றம் ஒன்றுமில்லை. காலின் அளவுக்கு செருப்பு, செருப்பு இருக்கும் அளவுக்கு காலை வெட்டுவதல்ல கருத்துத் தெளிவும் தூய்மையும் கொண்டோர் நடந்திடும் பாதை! திட்டம் மக்களுக்காக—மக்கள் திட்டத்திற்காக அல்ல" என்று அங்கும் தான் எத்தனையோ கருத்துக்கள்—விளக்கங்கள் — அறிவுரைகள்—சிந்தையில் நேர்மையும் தெளிவும் படைத்தோர் எவருக்கும் புரிந்திடுமளவுக்கு! எதிர்க்கட்சினரால் மட்டுமல்ல, காங்கிரசாராலும்—அதுவும் நருப்பெருமகனாரோடு பல காலம் பழகிய நெருங்கிய நண்பர்கள் பலரால்—எடுத்தியம்பபபட்டது!

இத்தனைக்கும் பிறகு அந்த மாபெரும் தலைவர் — முடிசூடா மன்னர்—அறிக்கை விடுகிறார்,

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கானசெலவு 6000கோடி ரூபாயாக உயரும் என்று. முதலில் கணக்கிடப்பட்ட செலவு 4800-கோடி பின்னர் சில காரணங்களால் அந்த மதிப்பீடு 5500-கோடியாக மாறியது. இப்போது அதைவிட உயருகிறது; ஆறுயிரம் கோடியாக!

ஏன் இந்த உயர்வு? எப்படி இயலும் இவ்வளவு தொகையையும் பெறுவதற்கு? 4800-கோடி ரூபாயே கிடைக்குமா — திட்டம் முழு அளவில் நிறைவேற்றப் படுமா—என்ற ஐயப்பாடு இருந்து வருகிறது. இந்தத் தொகையைப் பெறுவதற்கே என்னென்னபாடுகள் படவேண்டியிருக்கிறது, டில்லி சர்க்கார்! ஏழை கலங்குகிறனே—கண்ணீர் சிந்துகிறனே கஞ்சிக்கும் வழியில்லாதவனை மேலுமா கசக்கிப் பிழிவது-என்ன இருக்கிறது அவனிடம் எலும்பும் தோலும் அவற்றிற் கிடையோ எங்கோ ஒட்டிக்கொண்டிருக்கும் உயிரும் தவிர — என்பதையெல் மறந்து புதுப்புது வரிகளைப் போட்டது பண்டிதரின் ஆட்சி! இங்ஙனம் உறிஞ்சப்படும் தொகை ஏராளமாக இருப்பினும், திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் தொகையோடு ஒப்பிட்டால், யானைப் பசிக்கு ஒரு கவளம் சோறு போட்டதுபோலத்தான்! எனவே மற்றொரு முறை—நோட்டடிக்கும் முறை — அதுவும் பின்பற்றப்படுகிறது—அதனல் உண்டாகவிருக்கும் கேடுகள் அத்தனையும் உணர்ந்திருந்தும்! இருந்தும் திட்டத்தில் துண்டு விழும் தொகை ஏராளம்! அதனைச் சரிகட்ட அகில உலக பாங்கை நாடுகிறார்—அமெரிக்காவை நாடுகிறார் ரஷ்யாவிடம் கடன் கேட்கிறார்—ஆஸ்திரேலியாவோடு வியாபார ஒப்பந்தம் செய்கிறார். பணமாகக் கொடுத்தாலும் சரி, பொருளாக வழங்கினலும் சரி — அது கோதுமையாக இருப்பினும் சம்மதம், கனரகப் பொருளாக இருப்பினும் சம்மதம் — எண்ணெயாக இருப்பினும் ஏற்கிறேன், இயந்திரமாக இருப்பினும் மகிழ்ச்சி

என்கிறார் பண்ட மாற்றின்மூலம் பொருள் தரப்படுமா, பெறுகிறேன—தவணையிலே கடன திருப்பித் தரப்படவேண்டுமா, தயார் — இலவசமாகத் தருகிறீர்களா, எங்கள் நாட்டின் சார்பில் என் நன்றி என்றுரைக்கிறார்.

எதையும், எப்படியும் எங்கிருந்தும் பெற்றிடுவேன், என் உள்ளங் கவர்ந்த திட்டத்தினை நிறைவேற்றும் பணியினைச் செய்து முடித்திட, என்றவண்ணம் இந்தியப் பிரதமர் முயன்று ஓரளவு வெற்றியும் கண்ட பிறகு கூட —திட்டம் முழு அளவில், தீட்டப்பட்ட அளவில் நிறைவேற்றப்பட முடியுமா என்ற சந்தேகம் பொருளியல் நிபுணர்களிடையே இருந்து வருகிறது! இருப்பினும் திட்டத்தின் செலவுத் தொகை ஆறுயிரமாக உயரும் என்று அறிவிக்கிறார் பண்டிதர்!

இந்த உயர்வுக்குக் காரணம் என்ன காட்டப்படுகிறது தெரியுமா? விலைகள் உயர்ந்துவிட்டன —திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பொருள்கள் அனைத்தின் விலையும் உயரும்போது போடப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கூடுதலான தொகை தேவைப்படுகிறது — என்பது தான்! ஆனால் விலைவாசிகள் எப்படி உயர்ந்தன என்று கேட்டுப் பாருங்கள்!

சீறியெழுவார் பண்டிதர்! ஏனென்றால், அதற்குக் காரணம் அவரது திட்டம்தான! உள்ளத்தை, அல்லும் பகலும் அலைக்கழித்திடும் ஆரணங்கினை எப்படியோ நாடி அவளது அரவணைப்பும் அதரச் சுவையும் பெற்றாக வேண்டும் என்னும் ஆர்வத்தில் அவள் வீட்டுக் கொல்லைச் சுவரைத் தாண்டத் துணிந்திடும் கட்டிளங் காளை, சுவற்றில் பாதுகாப்பிற்கெனப் பதிக்கப்பட்டிருக்கும் கண்ணாடித் துண்டுகள் காலையும் கரத்தையும் குத்துமே என்பதையும் மறந்து, அல்லது நினைவிருந்தும் ஆர்வத்தில் அதையும் தாங்கிடும் நெஞ்சுரம் பெற்றவனாய், எண்ணியதை முடித்திடும் பணியில் இறங்குவதைப்போல்— தன் உள்ளங் கவர்ந்த திட்டம் யாராரோ எதிர்ப்பதால், மறைவதையல்ல, குறைவதைக் கூடத் தாங்கமுடியாத நேருப் பெருமகனார் பல வழிகளைக் கையாண்டார் அதனை எப்படியும் நிறைவேற்றியே தீரவேண்டுமென்ற எண்ணத்தோடு! அந்த வழிகள்தான் புதிய வரிகளும், பற்றாக்குறை நிதியமைப்பு முறையும் நாட்டில் இப்போது பொருள்களின விலைகள் உயர்ந்து வருவதற்குக் காரணம் இவைகள்தான்!

ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் இருவர் சண்டை போட்டுக் கொண்டாலோ, வேறேதாவது குறும்பு செய்தாலோ, ஆசிரியர் அவர்கள் இருவரையும்அழைத்து "உன்னாலே நான் கெட்டேன்! என்னாலே நீ கெட்டாய்" என்று ஒருவர் காதை ஒருவர் பிடித்த வண்ணம் தோப்புக்கரணம போடச் சொல்லுவாரல்லவா, அந்தக் காட்சியைத்தானே இந்த நிகழ்ச்சி நினைவூட்டுகிறது!! திட்டத்திற்குச் செலவிடப்பட வேண்டிய தொகை பெருகுவதற்குக் காரணம் விலைவாசிகளின் உயர்வு; விலைவாசிகளின் உயர்வுக்குக் காரணம் திட்டம் நிறைவேற பணம் தேடும் படலத்தில் பண்டிதரின் சர்க்கார் கையாண்ட பல்வேறு முறைகள்.

ப்ராங்கீன்ஸ்டீன் என்றொரு விஞ்ஞானி இறந்தவர்களை உயிர்ப்பிக்க வேண்டுமென்று அவனுக்கொரு விநோதமான வேட்கை! எனவே பல நாள் முயன்றான்—வெற்றியும் கண்டான்! இறந்தவன் ஒருவனை நடமாடச் செய்துவிட்டான். ஆனால் விஞ்ஞானியின் வெற்றி விபரீதத்தில் முடிந்தது. உயிர்த்தெழுந்தவன் தனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த விஞ்ஞானியைக் கொன்றுவிட்டான்! அதிலிருந்து தன்னையே அழித்திடும் பொருளையோ, சக்தியையோ ஆக்கிடும் மனிதனையும் மற்றவற்றையும் ப்ராங்கீன்ஸ்டீன் என்று அழைப்பது வழக்கம். அந்த முறையில் நேருப் பெருமகனாரின் ஐந்தாண்டுத் திட்டத்தையும் அழைக்கிறார் கர்னல் சி. ஆர். கிருஷ்ணசாமி என்பவர் — மெயில் என்ற ஆங்கில தினத்தாளில்! — விலை உயர்வே திட்டத்தை அழித்துவிடும் என்னும் கருத்துப்பட!

இதற்கா இந்த அளவு வரிப் பணத்தை மக்கள் கொட்டி அழ வேண்டும் என்று நாம் கேட்டால், "இந்த தி. மு. க. - வினரே இப்படித்தான். எதற்கெடுத்தாலும் குறைகூறுவது இவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. திட்டத்தின் தொகை பெருகினால் இலாபம் தானே. வடக்கு வாழ்கிறது— தெற்கு தேய்கிறது என்று சொல்லுகிறார்களே, இவர்கள் அதிகமாகச் செலவிடப்படும் தொகையில் பெரும் பகுதியை— இவர்கள் நாள்தோறும் கத்தி வரும் திராவிடத்திற்குப் பெற, ஏன முயலக்கூடாது! திட்டத்தில் செலவிடப்படும தொகை குறைந்திருந்தால் கூச்சலிட்டிருப்பார்கள் ஆகா நாம் மேலும மேலும் ஏமாற்றப்படுகிறோம் என்று. இப்போது தொகை கூடுகிறது — இப்போதுமா கூக்குரலிட வேண்டும்? கால் பட்டால்தான் குற்றம்— கைபட்டால் கூடவா குற்றம்?" என்று கேட்டிடத் தோன்றும் அவசர புத்தி படைத்த அகில இந்தியாக்களுக்கு.

ஆனால் நிலை அப்படியல்ல! செலவிடப்படும் தொகை அதிகமாகிறதே தவிர, திட்டத்தில் புதிதாக எந்த அம்சமும் சேர்க்கப்படவில்லை! மாறாக போடப்பட்ட திட்டத்திலே சில பகுதிகள் கைவிடப்படும். அடிப்படைத் தொழில் துறை ஏதுவும், கைவிடப்படும் ஜாபிதாவில் சேர்க்கப்படவில்லை! மற்றவை எவ்வளவு முக்கியமாக இருப்பினும் அவை ஒத்திப் போடப்படும்!

பணச் செலவு பெருகுகிறது— பெறப்படும் பயனோ சுருங்குகிறது. இருந்தும் உண்டி சுருக்குக—உங்களை வாழ்விக்கும் திட்டத்திற்கு உதவிடுக--என்று வேண்டுகோள் விடுக்கிறார் பண்டிதர்! என்னவென்று சொல்வீர், இதனை!!

*

சென்னை மாநில 4-ம் தர தந்தி சிப்பந்திகள் யூனியன்

700 அங்கத்தினர்கள் கொண்ட சென்னை மாநில 4-ம் தர தந்தி சிப்பந்திகளின் உபதலைவர் திரு. P. R. ராஜன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் அகில இந்திய தபால், தந்தி தொழிலாளர்கள் சங்கம் விடுத்த அறிக்கையின் படி வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதற்கு ஒத்துழைப்பும், ஆதரவும் தந்தார்கள். தவிர, திரு. க. அன்பழகன் M. A., M. L. A. அவர்களை சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். முடிவில் மாநில செயலாளர் திரு. H. R. M. D. ராஜீ அவர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பும், ஆதரவும் தரும்படி கேட்டுக் கொண்டுகூட்டத்தைமுடித்தார்.

"செச்சேச்சே! ஒரே மோசமாகப் போய்விட்டது. இதற்கோ, நான் தலைவனானேன். யார், என்னை மதிக்கிறார்கள். என்னை மதிக்காவிட்டாலா வது போகட்டும். யார், காங்கிரசை மதிக்கிறார்கள்..." என்று குறை பட்டுக் கொண்டிருந்தார், அகில இந்திய காங்கிரஸ் தலைவர், தேபர்.

"எதிர்க் கட்சிக்காரர்களைப்பற்றித் தானே, பேசிக்கொண்டிருந்தீர்கள். அவர்கள் உங்கள் காங்கிரசை மதிப்பார்களென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?" என்று கூறிக்கொண்டே நுழைந்தேன் நான்.

என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "எதிர்க் கட்சிக்காரர்களும் காங்கிரசை மதித்த காலம் ஒன்று இருந்ததுண்டு! இப்போது நான் எதிர்க்கட்சிக்காரர்கள் மதிக்க வேண்டுமே யென்று விரும்பவில்லை. என் கட்சியிலிருப்பவர்களே, எங்கே மதிக்கிறார்கள், காங்கிரஸ் கட்சியை?"

"என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! காங்கிரசுக்குத்தான் புதிது புதிதாகப் பலம் சேர்ந்துகொண்டுள்ளதே—பணம் கொடுக்கவும் டாடாவும் பிர்லாவும் போட்டி போட்டுக் கொண்டு முன் வருகிறார்களே—அப்படியிருக்கும்போது, ஏன் இப்படி பேசுகிறீர்கள்?"

"வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதீர் ஐயா! காங்கிரசில் புதிதாகச் சேர்வதையெல்லாம், பலம் என்று கூறுவது? என்னமோ எல்லாம், காலவினை!" என்று தலையிலடித்துக் கொண்டார்.

"மனம் புண்படும்படி என்ன சம்பவம் நடந்ததோ?"

"இதோ, பார்! அஸ்ஸாம் தெரியுமல்லவா?"

"ஆமாம்!"

"அங்கே, காங்கிரஸ்காரர்களுமல்லவா, எதிர்க்கட்சிகளுடன் கூடிக் கொண்டு கொட்டம் அடிக்கிறார்கள் அஸ்ஸாமுக்கு என்னைப் ஆலே இல்லையென்றால் வீசி யெறிகிறோம் ராஜினமாவை, என்கிறார்கள். என்ன செய்வேன், நான்?"

"பரிதாபம்தான்!"

"...ஊம்! அதுகிடக்கட்டும், பண்டித பந்த், தெரியுமல்லவா உமக்கு..."

"தெரியுமா, என்ன? அந்த்த நேரு என்கிறார்கள்! இப்போது டில்லி மந்திரி சபையையே ஆட்டி வைப்பதே அவர்தான் என்று சொல்லுகிறார்கள்! அவரையா தெரியாது..."

"நேருவின் சொந்த மாகாணமான, ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த அவர், என்ன செய்திருக்கிறார், தெரியுமோ? அங்குள்ள காங்கிரஸ் காரர்களிடம் போய் தூண்டிவிட்டுக் கிளர்ச்சி செய்யச் சொல்லியிருக்கிறார்..."

"என்ன பொறுப்புள்ள டில்லி மந்திரியா? என்ன, வேடிக்கையாயுள்ளதே! என்ன கிளர்ச்சி செய்யச் சொன்னார், ஐக்கியமாகாணத்தில்..."

"அந்த வயிற்றெரிச்சலைக் கேட்க வேண்டாம்! நீரே, போய்ப்பாரும்!" என்று கூறிவிட்டு, தலையில் கை வைத்துக்கொண்டு, உட்கார்ந்தார் தேபர்.

*

போலீஸ் ராஜ்யம் ஒழிக!
இலஞ்ச சர்க்கார் ஒழிக!
நிர்வாக ஊழல் நாற்றம் எடுக்கிறது!
வேண்டியவர்களுக்கு சலுகை தருகிறார்கள்!

என்கிற முழக்கம் கேட்டது. பிரஜா சோஷியலிஸ்டுகளின் ஆர்பாட்டமோ என்று உற்று நோக்கினேன். கதர்க் குல்லாய் அணிந்தோர், கரத்தில் காங்கிரஸ் கொடியைப் பிடித்த வண்ணம், இவ்வித முழக்கங்களை எழுப்பிக் கொண்டு, ஊர்வலம் சென்றுகொண்டிருந்தனர். இங்க ஒரு இடத்தில் மட்டுமல்ல, பற்பல இடங்களிலும், தினசரி இதுபோல ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகிறதாம். தேரியோ என்னொரு மாவட்டம், அங்கே, பஞ்சம் தலைவிரித்தாடுகிறதாம்! பிகாரிலிருந்த பஞ்சம், இப்போது ஐக்கிய மாகாணத்துக்குள்ளும், படையெடுத்து விட்டது. இதை எடுத்துக்கூறி சர்க்காரிடம் வாதாடுவதற்காக, காங்கிரஸ் காரர்கள் ஒரு ஊர்வலம் நடத்தினராம். போலீஸ்காரர்கள் தடியடி நடத்தினராம். காங்கிரஸ்காரர்கள்மீது! இந்த ஊர்வலத்தை நடத்தியதே யார் தெரியுமா? விசுவம் பர்தயால்திருபாதி எனும் காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்! விபரங்களைக் கேட்கக் கேட்கவேடிக்கையாயிருந்ததுஎனக்கு

"காங்கிரஸ்காரர்களாகிய உங்கள் ஆட்கள்தானே மந்திரிகளாயிருக்கிறார்கள். அவர்களிடம் நேரில் போய் இதையெல்லாம் சொல்லக்கூடாதோ?"

"நேரில் போய்ச் சொன்னால், நாங்களும் மக்களுக்காகப் பாடுபடுகிறோம் என்பதை எப்படிக்காட்டிக்கொள்வது? இந்த எதிர்க் கட்சிகள் இப்படியெல்லாம் ஊர்வலம் நடத்த, முழக்கங்கள் எழுப்புவதால்தானே, வளர்கின்றன. அதே முறைகளை நாங்களும் கையாண்டு, கட்சியை வளர்க்கிறோம்..."

"இதென்னய்யா! எதிர்க் கட்சிகள் குறைகூறாத அளவுக்கு உங்கள் ஆட்சியை நடத்தச் சொல்லுவீர்களா? அதற்குப் பதில்...!"

"அதென்னமோ! பண்டிதபந்து, இப்படித்தான் செய்யச் சொன்னார்—அப்போதுதான் காங்கிரஸ் வளருமாம்—ஒழிக போலீஸ் ராஜ்யம்" என்றார், அவர். வேடிக்கையாயிருந்தது, எனக்கு! அழியும் காங்கிரசைக் காக்கும் அரிப்பு எப்படியெல்லாம் போகச் செய்கிறது, இவர்களை!!

*

ஊருக்குத் திரும்பி வந்தேன், தேபரின் சஞ்சலத்தையும் சங்கடமான நிலைமையையும் எண்ணியவனாக. ஒரு சேதி, மேசையில் கிடந்தது! வடார்க்காடு மாவட்டகாங்கிரஸ் கமிட்டி கூடி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் போக்குபற்றி கண்டனம் தெரிவிக்க, தேபரிடம் தூது போவதென முடிவு செய்திருக்கிறதாம். இக்கமிட்டியைத்தான் கலைத்து விட்டதே, தமிழ் நாட்டுத் தலைமை— என்று எண்ணினேன் "இவர்கள் யார் எங்களைக் கலைப்பதற்கு. சட்டப்படி, செல்லாது இவர்கள் உத்தரவு. கமிட்டி கலையவில்லை—இருக்கிறது. போய், தேபரிடம் புகார் செய்யப் போகிறோம்", என்று ஒருவர் பேசிய பேச்சும், ஏட்டில் தென்பட்டது. ஐயோ, தேபரே! ஐயோ காங்கிரசே!! —என்றுஎண்ணியபடி, ஏட்டின் இன்னொரு பக்கத்தைப் புரட்ட, "தமிழ் நாடு காங்கிரசைப் பலப்படுத்த தலைவரின் முயற்சி", என்று கொட்டை எழுத்தில் போடப்பட்டிருந்தது. என்னை அறியாமலே, சிரிப்பு வந்துவிட்டது, அதைக் காண!! ★

ஏன் இயலாது? ★

★ எண்ணிப் பாருங்கள்!

இங்கிலாந்து நாட்டிலே, எலிசபெத் ராணியின் விருந்தும் உபசரிப்பும் பெற்றுக்கொண்டு, வீடு திரும்பும் நேரு பண்டிதருக்கு, விருந்தளித்திருக்கிறார், இன்னொரு ராணி! விற்பன்னர்களும், விதவிதமான அரசியல் பரிவாரங்களும் சூழ்ந்து நிற்க, பசும்புற்றரையிலே, பக்கத்தில் அந்த ராணி நிற்க, படமும் எடுத்துக் கொண்டிருக்கிறார், நேரு!! வேறு எந்த நாடுமல்ல, சில காலத்துக்கு முன்பு வரையில் கிழக்கேயுள்ள இந்தோனேஷியாவில் ஆதிக்கம் செலுத்திய ஆலந்து நாட்டின் அரசிதான், இந்த விருந்தளித்தவர். அவ்விருந்து பற்றிய விபரங்களை, ஏடுகள், அளிக்கும். ஆனால், அந்த ஆலந்து நாட்டின் சரிதத்திலே, பொதிந்து கிடக்கும், அவ்விருந்தை விடச் சுவையான சரித நிகழ்ச்சியை, நாம் காட்ட விரும்புகிறோம்.

*

ஐரோப்பா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டுமென எண்ணிய பிரெஞ்சு மாவீரன் நெப்போலியன் 1815ல் வீழ்ச்சியுற்றான்! அதன் விளைவாக, வல்லரசுகள் கூடி, பல நாடுகள் பற்றியும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டதன் விளைவாக ஆலந்தும் அதற்கருகிலுள்ள பெல்ஜியமும் ஒன்றாக இணைக்கப்பட்டன. இப்படி இணைக்கப்பட்டதால், இரு நாடுகளுக்கும், பொது பாதுகாப்பு ஏற்படக்கூடும் — எதிரிகளின் பாதுகாப்பினின்று காத்துக் கொள்ள ஏதுவாகயிருக்கும் — என்று விளக்கம் தரப்பட்டது! வேதனை ஒரு பக்கம் இருந்திடினும், பெல்ஜியத்து மக்கள் வேறு வழியில்லாமல், மனம் ஒப்பினர்!! இரு நாடுகளும் இணைந்து, பெரியதொரு 'தேசம்', உலகத் திரையில் உருவாயிற்று.

"ஆகா! ஆலந்து, எவ்வளவு வளமான நாடு தெரியுமா? அங்கே விளையும் கோதுமை, கிடைக்குமே உங்களுக்கு! அது, இல்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்? இனிக் கவலையில்லாமல் நீங்கள் வாழலாம்!"

என்று, பெல்ஜியத்துக்காரர்களுக்கும்,

"ஆலந்து மக்களே! உங்களை விடப் பாக்கியம் செய்தோர் யார்? பெல்ஜியம், உங்களைப்போல விவசாய நாடாக இல்லாமலிருக்கலாம்! ஆனால், தொழில் வளத்துக்கு வேண்டிய மூலப் பொருள்களைப் பெற்றிருக்கும் தேசம் அது!! விவசாயம் ஒரு பக்கம், தொழில் உற்பத்தி இன்னொரு பக்கம், இரண்டுமிருந்தால் உங்களது ஒன்றுபட்ட நாட்டை யாரால் வெல்ல முடியும்?"

என்று, ஆலந்துக்காரர்களிடமும், பிரிய மொழிகள் பேசப்பட்டன! உண்மையுங்கூட அதுதான். ஆலந்துடன் இணைந்ததால், வேண்டிய உணவுப்பொருள்கள் கிடைத்தன, பெல்ஜியத்துக்கு—தங்கள் நாட்டில் பூமிக்குள் கிடக்கும் சுரங்கப் பொருள்களைத் தோண்டியெடுத்து, ஆலைகளை ஓட்டி, அதன் மூலம் கிடைக்கும் பொருள்களை விற்று, பணம் குவிக்கும் வாய்ப்பும் இருந்தது பெல்ஜியத்துக்கு! உள்நாட்டில் மட்டுமல்ல, டச்சுக்காரர்களின் குடியேற்ற நாடுகளைக்கூட, நல்ல 'மார்க்கெட்' ஆக்கிக் கொள்ளும் வசதியிருந்தது, பெல்ஜியத்துக்கு!!

எனினும், பெல்ஜியம்—ஆலந்துடன், இணைந்து வாழ்வதை விரும்பவில்லை. வேறு வழியில்லை யென்று, ஒப்புக்கொண்டு விட்டதே தவிர, தன்னுடு, தனியரசு எனும் வேட்கை மட்டும் பெல்ஜியத்துக்குப் போய்விடவில்லை.

இந்த வேட்கை எழக் காரணமாக யிருந்தது, எது தெரியுமா? இரண்டு நாடுகளுக்கு இடையிலும் ஏற்பட்ட மொழிச் சிக்கல்தான்!!

இணைக்கப்பட்ட இரு நாடுகளையும் வில்லியம் என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவன் டச்சு மொழியை மட்டுமே, ஆட்சி மொழியாக்கினான்! எல்லாரும், டச்சு மொழியினைப் படிக்கவேண்டும்—கல்வி நிலையங்களிலெல்லாம் டச்சு மொழியே போதனாமொழியாக இருக்கவேண்டும் என்று சட்டம் செய்தான்!!

இது பெல்ஜிய மக்களை, எரிமலையாக்கியது. பெல்ஜியத்துக்குள், பிளெமிஷ், வலூன் எனும் இருமொழிகளைப் பேசிய மக்கள் இருந்தார்கள். பிளெமிஷ் மொழி, டச்சு மொழியுடனும்-வலூன், பிரெஞ்சு மொழியுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவை. எனினும், பெல்ஜியத்திலுள்ள இரு பிரிவினரும், டச்சு மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்தனர்!!

"அக்கிரமம்! அநீதி!!"

"டச்சு மொழி தெரிந்தோருக்குத்தான் அரசாங்கத்தில் சலுகை கிடைக்கிறது."

"நமது மொழிகள், என்ன, நாதியற்றவைகளா? இவைகளைப் பேசும் நாம், நாடாளும் அருகதை யில்லாதவர்களா?"

"டச்சுக்காரர்களுக்குத் திமிர் அதிகமாகிறது!"

"ஆமாமாம்! ஏன் — ஏற்படாது? அரசில், அவர்களுக்குத்தானே, பெருமை, கியாதி எல்லாம்!"

இப்படி பெல்ஜியத்து மக்கள் பேசலானார்கள். அவர்கள் உள்ளம், கொதித்தது. அரசில், வாழ்வில், சமூகத் துறையில், தங்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமம் அவர்களை யெல்லாம் உலுக்கலாயிற்று! ஐயோ, எதிர்த்தால் கோதுமை கிடைக்காதே—வர்த்தக வளம் குறைந்து போய்விடுமே—வசதிகள் அனைத்தும் போய் விடக்கூடுமே என்று அவர்கள் கவலைப்படவில்லை! தமது மொழிக்குமேல் டச்சு மொழி ஆதிக்கம் செலுத்துவதை, தாங்க முடியவில்லை, அவர்களால்!!

என்ன செய்வது?

தனிநாடு கேட்கலாம்-ஆனால், பாதுகாப்புச் சிக்கல் உண்டாகுமே!

ஆமாமாம் — உடனடியாகத் துண்டித்துக் கொள்ளாமல், ஒரு வழி காணவேண்டும்.

இப்படி ஆலோசித்த பின், பெல்ஜியத்து மக்கள், ஒரே மத்திய அரசின்கீழ், பிரதேச சுயாட்சி வேண்டுமெனக் கேட்டார்கள்! இதையும், டச்சுக்காரர் மறுக்கவே, பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, கடைசியில் வேறு வழியில்லையெனக்

கண்டதும், துப்பாக்கித் தூக்கலாயினர் 1830-ம் ஆண்டில்!! விளைவு, என்னவென்று கேட்கவும் வேண்டுமா? நீதி, வெற்றி பெற்றது! அடிமைத் தளையை அறுக்க வேண்டுமெனும ஆர்வம, வெற்றி பெற்றது!! பெல்ஜியம், ஆலந்திலிருந்து பிரிந்து, தனி அரசாயிற்று.

1838-ல், எந்த வல்லரசுகள், இந்த இணைப்பைச் செய்தனவோ, அதே ஐரோப்பிய வல்லரசுகள், தனியரசையும அங்கீகரித்தன. பெல்ஜியமும், சமஅந்தஸ்து பெற்றது.

தனியரசானதால், பெல்ஜியம் அழிந்து போய்விடவில்லை—ஒரே ஒரு கண்ணாடித் தொழில் மூலம், உலகத்திலேயே பிரசித்தி பெற்ற நாடாக ஆயிற்று.

இப்படி தனியாக நிறுவிய பெல்ஜியத்திலும் பிளெமிஷ், வலூன் என்று இருமொழி பேசுவோர் இருந்தனரல்லவா? அதனால், ஆலந்துடன் இணைந்தபோது ஏற்பட்டது போன்ற மொழிச் சிக்கல் இங்கும் அரும்பும் என்றே எதிர் பார்க்கப்பட்டது.

"பார், பார்! நம்மிடமிருந்து எந்தக் காரணத்துக்காகப பிரிந்துபோனார்களோ, அதே சண்டை அவர்களுக்குள்ளும் ஏற்படப் போகிறது. வடக்கேயிருப்போர் பேசும் பிளெமிஷ் மக்களும், தெற்கேயிருக்கும் வலூன் மொழியினரும் அடித்துக் கொள்ளப் போகிறார்கள்"

என்கிற ஆருடம் கணிக்கப்பட்டது! எனினும், இந்தச் சிக்கல் ஏற்படாமல், பெல்ஜியத்து அரசியற் சட்டத்தில், இரு மொழிகளின் உபயோகத்துக்கும் சுதந்திரம் அளித்தனர்!!

இரு மொழிகளும் தேசிய மொழிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டன!! ஆனால், சட்டம், நிர்வாகம் முதலியவைகளுக்கு ஒரு பொது மொழி வேண்டுமே? அதனால் 1914 வரையில் பிரெஞ்சு மொழியை, பெல்ஜியத்து மக்கள் பொது ஆட்சி மொழியாக வைத்துக் கொண்டனர்! ஆலந்து மொழியை நாடவில்லை. காரணம, பிரெஞ்சு மொழி, மிகவும் பயன்படக்கூடியதாகவும், உலகத்தில் ஒரு பகுதியினர் பேசும் மொழியாகவும் இருந்ததுதான்!! இப்படி, இன்னொரு மொழி, தமக்கு பொது ஆட்சி மொழியாக யிருப்பதையும் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, பெல்ஜியத்து மக்கள் விரும்பவில்லை. இதன் காரணமாக, பல அமைச்சர் அவைகளும் கவிழ்ந்தன! இறுதியில், பிளெமிஷ் மக்கள் வசிக்கும் பகுதிகள் அம்மொழியும், வலூன் மக்களின் வாழ் இடங்களில் அம்மொழியும, எல்லாத் துறைகளிலும் ஆட்சி மொழியாயின—இப்போதும், பெல்ஜியம், சிறப்போடு, வாழ்ந்தே வருகிறது!!

அது மட்டுமல்ல, எந்த ஆலந்து, ஒரு காலத்தில் பெல்ஜியத்தைக் கேவலமாக நினைத்ததோ, அதே ஆலந்து இப்போது பல பொருளாதாரக் கூட்டுறவுகளை உண்டாக்கிக்கொண்டு, பெல்ஜியத்துடன் நேசபாவத்துடன விளங்குகிறது.

*

சட்டசபையில் பேசினாரே நிதியமைச்சர் சுப்ரமணியம், "சின்னஞ் சிறு நாடு எப்படி வாழ இயலும்?" என்று. நாம் கோரும் திராவிடத்தைவிட, எவ்வளவோ, சிறியது பெல்ஜியம்! உருவில் மட்டுமல்ல, எல்லா வளத்திலும், சிறியது. எனினும், அது முரசு கொட்டியது — தனி நாடாக ஆயிற்று—அதற்கு மூல முழக்கமாக அமைந்தது, இன்னொரு மொழி ஆதிக்கம்!! திராவிடத் திரு அகத்திலும், ஆதிக்கம் செலுத்துகிறது, இந்தி. மொழித் துறையில் மட்டுமல்ல, அரசியல் துறை, பொருளாதாரத்துறைகளிலும் வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது. இதனை, 'அக்கிரமம்' என்று கூறினால், சிறு நாடு எப்படி வாழும்—எப்படிப் பாதுகாத்துக் கொள்ள இயலும்—எப்படி வர்த்தகத்தை வளப்படுத்த இயலும் என்று கேட்கிறார், சுப்பிரமணியம். அவரது சீடர்கள நேரு பெறும் விருந்தினைக் காட்டி மகிழும்போது, இச் சம்பவத்தை எடுத்துச் சொல்லுங்கள் — எண்ணிப் பார்க்கும்படி கூறுங்கள்!!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

தமர் நிக்ரூமாவையும் வரவேற்று உபசரித்து கைலாகு தருகிறார், எலிசபத்ராணி. இதோயிருக்கும் மலேயாவும், காமன்வெல்த் அணிக்குள் ஒரு நாடாகப் போகின்றதென்கிற செய்தியைக் கேட்கிறோம்!! இவ்விதம், அடிமைப் பிடியில் சிக்கிக் கிடந்த ஒவ்வொரு நாடும், விடுதலைபெற்று, புதுமதிப்பும் உரிமையும் அடைவதைக் கண்ணாரக் காண்கிறார் நேரு — எனினும், நமது கோரிக்கையை மறுக்கிறார்! நமது குரலுக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் சக்தியினை அறிந்தும் மறுக்கிறார்! காரணம், 'தாய், பிறன் கைப்படச் சகித்திடும்' குணங்கொண்ட குணாளர்கள், இங்கு இருப்பதுதான்! அவர்களும், மனந்திருந்தி, நமது மார்க்கம் வந்திடும், நன்னாள் வரவேண்டும். அதற்கான பணியில் அனுதினமும் ஈடுபடுங்கள் — அப்போதெல்லாம், நமது கொள்கைக்காகக் குருதியும் உயிரும் அளித்த உத்தமர்களின் திருநாமத்துக்குச் சிரம் வணங்க மறவாதீர்கள்—என்று இந்த ஜூலை 15 அன்று, நினைவூட்டுகிறோம்—வேலெறி படைகாள்! சூலெறி மறவர்காள்! செறறிடும் திறனுடைத் தீரரத்தினங்காள்! யாவரும் வாழிய! யாவரும் வாழிய! — எனகிற கவியரசரின் உரைகளோடு. வாழ்க, தியாக மணிகள்! வருக திருவிடம்!!

★

"கடவுள் பக்தி!"

கவர்னராக இருந்தால், அவருக்கென்ன! வேண்டியது பணம் — எனவே, 'வெடுக்கென்று' பிடுங்கினார்!!

கவர்னர் அவரைவிட, சாமர்த்திய சாலி — அதனால், பணத்தை விடவில்லை—இவரிழுக்க அவரிழுக்க கொஞ்ச நேரம், கோயில் 'கர்ப்பக்கிரகம்' வேடிக்கையான இடமாகி விட்டது.

பத்தே பத்து ரூபாய்! பகவானைத் தெரிசித்து, பாபம் போக்கிப் புண்யம் தேடப்போன அந்த இடத்திலும், கவர்னர் பிரானுக்கு, காசாசை விடவில்லை-இல்லையெனில் கவுரவத்தையும் மறந்து, இழுத்து பறித்துக் கொண்டாகிற்பார்!

கவர்னர் இப்படிச் செய்தார் என்றால் அவருடன் 'மல்'லுக்கு நின்ற ஆசாமி யார் என்று அறிய விரும்புவீர்கள், — வேறு யாருமல்ல கோயில் குருக்கள்தான்!

ஒரு குருக்களுக்கா இவ்வளவு தைரியம் — என்று நீங்கள் வியப்பது, தெரிகிறது. அவருக்கு, கவர்னராக இருந்தாலென்ன அல்லது அந்தக் கடவுளாகவே இருந்தால்தான் என்ன — வேண்டியது, காசு! எனவே, துணிந்து இழுத்திருக்கிறார்.

இப்படி 'இழுபறி' நடந்தபோதுகவர்னருக்கு காயமும் உண்டாயிற்றென்று ஒரு சேதி வந்தது! அதனை மறுத்து, 'காயம் ஏதும் படவில்லை' என்று 10-ந் தேதியன்று ஒரிஸ்ஸா சர்க்கார் ஒரு விசேஷ பத்திரிகைச் செய்தி அனுப்பியுள்ளது!!

பூரியிலுள்ள ஜகந்நாதர் கோயிலில், கவர்னர் பீமசேன சச்சார், கடவுளைக் கும்பிடப் போனபோதுதான் இச்சம்பவம் நிகழ்ந்தது. யாத்திரீகர்கள், பூரி ஜகந்நாதரைத் தரிசிக்கச் சென்றால், அவரது காலடிகளில் காணிக்கைச் செலுத்துவார்கள்!

இப்படிச் செலுத்தும் தொகை, கோயிலின் பொது நிதிக்குப் போய்விடும்—குருக்களுக்குச் சேராது!! கவர்னரும், இதுபோல கடவுளின் காலடியில் தனது பத்து ரூபாய் நோட்டை போட முயன்றிருக்கிறார்விடுவாரா அர்ச்சகர்? "வேண்டாம்! வேண்டாம்!! என்னிடம் போடுங்கள்" என்று பிடுங்கியிருக்கிறார். இப்படி யாராவது, கடவுள் காலில் போடாமல் அர்ச்சகரிடம் கொடுத்தால் அது அவருக்குச் சொந்தமாகிவிடுமாம்! அந்த ஆசை குருக்களுக்கு — அதனால் கடவுளின் காலைவிட, தன் கையிலேயே போடுமாறு வேண்டியிருக்கிறார்—கவர்னரின் கையிலிருந்த பணத்தையும் பிடித்து இழுத்திருக்கிறார்!!

★

மகிழும் தபால் சிப்பந்தி

இருபதாண்டுகள் உழைத்தாலும், எத்தகைய தகுதி பெற்றிருந்தாலும், நம்மவரின் நிலையை உயர்த்த நாம் நினைக்கும் ஒவ்வொரு முயற்சியையும் அரசாங்கம் தனது பிரத்தியேக திட்டங்களின் மூலம் முறியடிப்பதைக் காணுகிறோம். ஆனால் சோவியத் நாட்டிலே அதல்ல நிலைமை. அங்குள்ள ஒவ்வொரு தனித் தனியான அரசாங்க அங்கங்களும், தபால் இலாகா முதற்கொண்டு சுரங்க இலாகா வரையிலே உள்ள எல்லாத் துறைகளிலேயும் உழைப்பவருக்கு முதலிடமும், தகுதி பெற்றவர்களுக்குத் தனிப் பெருமையும் அளிக்கிறது அந்நாட்டு அரசாங்கம்! எங்கு சென்றாலும் அந்த மக்களரசாங்கத்தின் பெருமிதமும், பூரிப்பும் உள்ளபடியே நம்மைக் கவரத்தான் செய்கிறது. தகுதியுள்ளோர்-விஞ்ஞானம் கற்றோர்—தனியாக சிந்தித்துப் புதுமை கண்டு இலாகாவின் வளர்ச்சிக்கு அளிப்போர்—என எல்லாத் துறை விற்பன்னர்களுமே அங்கே போற்றப்படுகிறார்கள். உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமானால் ஒரு நல்ல போஸ்டல் உயர்தர அதிகாரியான **ஜார்ஜி நிகோலாவிட்ச் அமீர்னுவ்** என்பவரின் வாழ்க்கையின் வளர்ச்சியை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லலாமென்று கருதுகிறேன்.

தோழர் 'ஜியார்ஜி நிகோலாவிட்ச் அமீர்னவ்' 1912-லே பிறந்தவர். அவரின் படிப்பு, அவர்களின் தாய் தந்தையர் கிராமப் பள்ளியாசிரியர்களாக இருந்ததால் அவரின் இளமை காலத்திலேயே துவக்கப்பட நல்ல வாய்ப்பிருந்தது. எனவே அவர் மளமளவென்று படித்தார். அங்குத் தேவையான ஒன்பதாவது படிவம் (9th ஸ்டாண்டர்டு) வரை படித்து முடித்துவிட்டு தனது 16-ஆம் வயதில் 1928-ல் அவர் தபால் இலாகாவில் ஒரு போஸ்ட்மேனாகச் சேர்ந்தார். அப்போது அவருடைய ஆரம்பச் சம்பளம் வெறும் 37 ரூபிள்கள்தான் அதாவது இந்தியாவில் தற்போது தபால் சிப்பந்திகளில்—நம் தபால்காரர்களின் ஆரம்ப சம்பளத்தைப் போன்றது அது.

> தபால், தந்தி இலாகா உழைப்பாளர்கள், வருகிற ஆகஸ்டு திங்கள் 8-ந் தேதி, வேலை நிறுத்தம் செய்வதென முடிவெடுத்திருக்கிறார்கள்! இன்றைய நாகரீக உலகில் தபாலும் தந்தியும் எவ்வளவு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன என்பதை எவரும் மறுக்கவியலாது. காலந் தாழ்த்தாது கடமையாற்றக்கூடிய பொறுப்பிலிருக்கும் இவர்களுடைய குறைகளை, ஏனோ, டில்லி, கவனிக்க மறுக்கிறது !!
>
> இங்குள்ள இவர்களின் நிலைமையையும், ரஷ்யாவில் எப்படி சிப்பந்திகள் ஆதரவு காட்டப்படுகிறார்கள் என்பதையும், கடந்த ஆண்டு ரஷ்யா சென்றுவந்த **டி. எஸ். ராமானுஜம் எம். ஏ. எல். எல். பி.,** அவர்கள் எழுதுகிறார், இக்கட்டுரையில்.

அவர் இரண்டு வருஷம் தபால்காரராக சேவை செய்து முடிந்தபின் ஒரு போஸ்டல் ஏஜண்டாக (அதாவது ஒரு தபால்காரர் சாதாரண கிளார்க்காக) 1930-ல் உயர்த்தப்பட்டார். 1931-ல் மீண்டும் அவர் 'யூரல்' வட்டாரத்திலுள்ள ஒரு போஸ்டாபீஸின் தலைவராக உயர்த்தப்பட்டார். 1933-ல் மீண்டும் அவருக்கு வேலையுயர்வு. அதாவது தபால் இலாகா மந்திரி சபைக் காரியாலயத்தின் ஒரு பகுதிக்குத் தலைவராக—ஹெட் இன்ஸ்பெக்டராக—அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1933-லிருந்து 1939 வரையில் அவர் பல முறைகள், பல உயர் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டு 1939-ல், மாஸ்கோ நகரின் ஒன்பது தபால் நிர்வாகப் பிராந்தியங்களில், ஒரு பிராந்தியத்தின் தலைவராக்கப்பட்டு அங்கே 1941 வரையில் பிரதம அதிகாரியாகப் பணியாற்றினார்.

பிறகு அவரின் திறமை ராணுவத் தபாலிலாகாவிற்குத் தேவைப்படவே அவரின சேவையை 1941-லிருந்து 1945-வரை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு விட்டது. அங்கு அமைக்கப்பட்டிருந்த இராணுவ தபால் தந்தி டெலிபோன் இலாகாவின் துணைப் பிரதம அதிகாரியாக அவர் சேவை செய்தார். மீண்டும் 1945-ல் அவருக்கு மாஸ்கோ நகரின் பிரதம போஸ்டாபீஸில் (சென்ட்ரல் போஸ்டாபீஸில்) துணைப் பிரதம அதிகாரியாகப் பதவியுயர்வு கிடைத்தது. அப்பதவியிலே அவர் 1950 வரை பணியாற்றினார். பிறகு 1950-லிருந்து 1955 வரை மீண்டுமோர் பதவிககு உயர்த்தப்பட்டார். அதாவது ரயில் — விமானத் தபால் மெயில் சர்வீசில், அவர் பிரதம அதிகாரியாக உயர்த்தப்பட்டார்—அங்கே பணி முடிந்தபின் அவர் சைனா நாட்டிற்கனுப்பப்பட்டார். சைனாவின் தபால் இலாகா சீர்கெட்டுக் கிடந்த நேரத்திலே, அதைத் திருத்தியமைக்கும் பொறுப்பையும் அதற்கான வகையில் யோசனை சொல்லும் பொறுப்பையும் இவரிடம் ஒப்படைக்க சைனாவின் அரசாங்கம் இவரின் சேவையைக் கடனாகத் தந்துதவுமாறு கேட்டிருந்ததற்கேற்பவே அவரங்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் செய்த சேவை உள்ளபடியே பாராட்டத்தக்கதொன்றாகும்.

1956-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலே அவரின் சேவை

முடிந்தபின் மீண்டும் அவர் மாஸ் கோவிற்குத் திரும்பி வந்து தற் போது அவர் வகித்துககொண் டிருக்கும் சென்ட்ரல் போஸ்டாபீ ஸின் தலைமைப் பதவியைப் பெற் றார்.

அவரின் தற்போதைய அடிப் படைச் சம்பளம் மாதம் 1800 - ரூபில்கள். (1 ரூபில் ரூ. 1-2-0 ஆகும்) இதன்னியில் அவருக்கு அவரின் நீண்ட சேவையின் பேரில் தன் சம்பளத்தில் 40 சத விகிதா பிரீமியமாகவும் கிடைக் கிறது. அது மட்டுமல்ல; அவ ரது நற்சேவைக்காகவும் ஒரு தொகை அவருக்குப் பிரீமிய மாகச் சேருகிறது. (இந்த பிரீமி யத் தொகையின் அதிக பட்ச மானது, ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் இரண்டு மாதச் சம்பளமாகும்') நற்சேவை என்று நாம் சொல்லுகினறபோது இவ ருக்குக கொடுக்கப்பட்ட திட்டங் களைச் சரிவர சாதித்து முடிப்பது என்பதாகும. அது மட்டுமல்ல; திட்டங்களில் இவர் காணுகின்ற வெற்றியைப் பொறுத்து பிரீமி யத் தொகை இவருக்கு மட்டுமல் லாமல் இவரின்கீழ மணியாற்றும் சிப்பந்திகளுக்கும் அளிக்கப்படு வது மிகவும் குறிப்பிடத் தக்க தாகும்.

கடந்த 1928-லிருந்து 1947 - வரை இவருக்குப் பதவியுயர்வை அளித்த எந்த வேலைக்கும இவர் எந்தப் பரிட்சையும் எழுதித் தேர்ச்சியடைய வேண்டிய அவ சியமே இருந்ததில்லை என்றால் அந்த நாட்டு தபால் இலாகாவின் நேர்மையையும், தாராள மனப் பான்மையினையும் நம்மாலே மறக் கவே முடியவில்லை. இலாகா பூர்வ மான வேலை யுயர்வுக் கமிட்டி இவ ருடைய புதிய பழைய வேலைகளின் தகுதி திறமைகளை முனகூட்டி பரிசிலித்து கண்டறிந்து வைத் துக்கொளளுவதால் எந்தவித மான பரிட்சைகளுக்கும் அவசிய மேற்படுவதில்லை என்று அவர் குறிப்பிட்டதோடு, இத்தகைய முறைகள்தான் வேலை வுயர்வு முறைகளிலேயே மிக மிகச் சிறந்த தெனத் தான்கருதுவதாகத் தெரி வித்தார்.

அங்கு எந்த வேலைக்குமே ஒரு குறிப்பிட்ட கல்விவரையறைக்கு தேர்வு நிர்ப்பந்தம் கிடையாது! இதுபற்றி அவர் குறிப்பிடுகை யில் "எனது இளமைக் காலத்தில் 9 படிவங்களைக் கொண்ட கல்வி வகுப்புகளிருந்தன. அதில் 7 - படிவங்கள் கட்டாயப் பிரிவைச் சேர்ந்தவையாகும். ஆனால் இவ் வாண்டு முதல் 10 படிவங்களைக் கொண்ட கல்வி முறை அனுஷ் டிக்கப்பட்டு வருகிறது. இதில் ஒவ்வொருவரும் இந்த பத்து படி வங்களையும் படித்துத் தேறியாக வேண்டுமென்பது கட்டாயமாகும். முன்பெல்லாம் முதல் ஏழு படிவங் களில் கண்டிப்பாகத் தேர்ச்சி யடைய 'பிரைவேட் ட்யூஷன்' வகுப்புக்கள் இலவசமாகவே நடத் தப்பட்டும் வந்தன. இபபோதோ 8-9-10 படிவங்களுக்கும்கூட ட்யூ ஷன பீஸ் கிடையாது. அதாவது இலவசமாகத்தான சொல்லித் தரப்படுகிறது. அது மட்டுமல்ல; ட்யூஷன் பீஸ் தற்போது தொழிற் கல்வி போதிக்கும கலாசாலைகளுக் கும, கல்லூரிகளுக்குமகூட கிடை யாது. மேலும் 1947-ல் நானாகவே வேண்டுமென்றே ஒரு போஸ்டல் கல்லூரியிலே மாணவனாகச் சேர்ந்து படித்தேன். அது போக்குவரத்து விவகாரங்களில் தெளிவுரை தரும் கல்லூரி. அங்கு மின்சாரம் — டெலிகிராப்—டெலி போன—ரேடியோ — போன்றவை களில் பாடம் சொல்லித் தரப்படு கிறது. அங்கே நானொரு கரஸ் பாண்டென்ஸ் மாணவனாக மட் டுமே இருந்தேன். என்னுடைய அந்த கல்லூரி நேரத்திலே நான் கற்றுககொண்டதெல்லாம் 'அனு பவபூர்வமான வேலைகள்தான் (Practical side) இருந்தாலும் இதனை முறையாகச் சொல்லித் தரும் பாட திட்டத் தெளிவுரைச் சாதனமொன்றும் எனக்கு இருக்க வேண்டுமென்றும் நான கருதி னேன். ஆனால் இதனை முறை யாகக் கற்றுத்தேற ஒவ்வொரு வருக்கும் 5½ ஆண்டுக் காலம் பிடிக்கும். ஆனால் எனக்கோ இது 4 ஆண்டுகளில் சாத்தியமாகிவிட் டது. இன்னும்கூட எனக்கு தத்துவார்த்தங்களைக் கண்டறிய ஆவல் - அதற்காகவே மேலும் சில படிவங்களில் அமர்ந்து படிக் கவும் எனக்கு ஆசை! என்னு டைய இந்த உயர்வுப் பிரச்சினை தனிப்பட்டதல்ல; எல்லோருக்கும் பொதுவானது. இன்னும சொல் லப்போனால் எனககு இப்போது துணையாக இருக்கினற (என் டெப்டி சீப்) வருக்கும் என்னைப் போனற உயாவுதான் அளிக்கப் பட்டிருக்கிறது. அவரும் இப்படித் தான் முன்னேறிக்கொண்டு வரு கிறார்—என னுடைய காரியாலயத் தில் நீங்கள் பார்த்தால் பல அதி காரிகள் தங்களின் ஆரம்ப வாழ்க் கையை இப்படித்தான் முதன் முதலிருந்து தபால்காரராக இருந்து துவக்கியிருக்கிறார்கள். பல தபால்காரர்கள் நான் மேலே சொன்ன கல்லூரியில் மேலுயர் வுக்காகப் படித்துக்கொண்டிருக் கிறார்கள்!" என்று அவர் கூறி முடித்தார்.

எனவே நன்றாகப் பின்னி யமைக்கப்பட்ட சமுதாயப் பொரு ளாதார அமைப்பில் வேலையுயர்வு மிகச் சிறந்த அம்சமாகும். எனவே அந்த உண்மையையும் பலனையும் இந்த இந்தியமண்ணிலே இருந்து கொண்டும் அநுபவிக்க முடியும். எப்படியிருந்தால்? திட்டந் தீட்டு பவர்கள் சரியாக திட்டம் தீட்டித் தந்தால்!

—"Post Men Herald"

முகப்பு விளக்கம்

பணம் பெருத்தோரைப்பார்த்து, நாட்டுக்கு உதவவேண்டும் என்று அழைக்கிறார், டி. டி. கே! அவர் களோ, டி. டி. கே. எந்தளவுக்குத் தமக்கு உதவியாக யிருப்பார் என்று இருதயத்தைத் தடவிப் பார்க்கிறார்கள்!! இருதயம், இரு வருக்கும் கிடையாது என்பதனை நாடுதான் நன்றாக அறியும். எனி னும், இவர், அவர்களைப்பார்த்து 'உதவுங்கள்' என்பதும்; அவர்கள், இவரிடம் 'உதவுங்கள் நீங்கள். நாடு முன்னேறச் செய்வோம்' என் பதும் அடிக்கடி நடக்கிறது.

ஆண்டவனுக்கு வேண்டாமா, சிக்கனம்?

பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைச் சமாளிக்க எளிய சிக்கன வாழ்வை வாழ வேண்டுமென்று மக்களுக்கு தேசத் தலைவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். சிக்கனமாக வாழச் செய்வதற்காக மக்களிடம் இருக்கும் பணத்தை வரியாக வாங்கிக் கொள்கிறார்கள்.

"மக்களுக்கு வரியைப் போட்டுவிட்டு நாம் மட்டும் சும்மா இருக்கலாமா? நாமும் கொஞ்சம் கஷ்டப்பட்டுக் காட்டலாம்" என்கிறார் பண்டித நேரு. சமிக்ஞை பூர்வமாக அவரும் அவரது சகாக்களும் மற்ற மாகாண மந்திரிகள் பலரும் தங்கள் சம்பளத்தில் இஷ்டபூர்வமான வெட்டு ஏற்படுத்திக்கொள்ள முன் வந்திருக்கிறார்கள்.

சர்க்கார் காரியாலயங்களில் உபயோகப்படுகிற காகிதங்களில்கூட சிக்கனம் செய்யுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறது உள்நாட்டு இலாகா.

நம் நாட்டில் ஏராளமான ஆடம்பரச் செலவுகளுடன் நடத்தப்படுகிற விழாக்களில் மத விழாக்கள் முக்கியமானவை. ஒவ்வொரு ஆண்டிலும் ஒரே மாதிரியான விழாக்கள் திரும்பத் திரும்ப ஆலயங்களில் நடத்தப்படுகின்றன. இவைகளில் செலவாகிற பணமோ ஏராளமானது.

மக்கள் இன்னல் படுகிறபோது "மக்களைப் படைத்த ஆண்டவன்" மட்டும் ஆடம்பரங்களில் திளைப்பானேன்? விழாக்கள் நடக்கட்டும். வழிபாடுகள் நடக்கட்டும். ஆனால் அவைகளுக்காக ஆகும் செலவுகளைக் குறைத்து ஏழை நாட்டு மக்களுக்கேற்ற எளிய வழிபாடுகளை நடத்தலாம்! அதில் மிச்சப்படும் பணத்தை தேசீய திட்ட நிதிகளில் ஈடுபடுத்தலாம்.

"கடவுள் மக்களுக்கு சோற்றின் வடிவத்திலேதான் வருகிறார்" என்று ஒருமுறை காந்தியடிகள் கூறியது இங்கு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தமிழ் நாட்டில் ஏராளமான சொத்துக்கள் சேர்த்து வைத்திருக்கிற ஆலயங்களும் மடங்களும் பல, பல. அற நிலைய பாதுகாப்பு ஸ்தாபனத்தின் மூலம் இந்த ஆலயங்கள்மீதும் அரசாங்கத்திற்கு ஆதிக்கம் இருந்து வருகிறது.

ஆலயங்களுக்கு இந்தச் சொத்துக்களின் மூலமும், பக்தர்கள் தரும் காணிக்கைகள் மூலமும் ஏராளமான பணம் வருகிறது. ஆண்டவன் செலவுகளுக்கு ஒரு சிக்கனக் கணக்குப் போட்டு அந்தச் செலவுகளுக்குப் போக மீதமுள்ள பணத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம்—வேண்டுமானால் நீண்ட கால தவணை கடனாக அதை வைத்துக் கொள்ளலாம்.

இதை அற நிலைய ஸ்தாபனமும் அரசாங்கமும் செய்ய முடிந்தால் தன் ஏழை பக்தர்களின் எதிர்கால நல்வாழ்வுக்காக ஆண்டவனும் நேரடியாக பங்கு எடுத்துக் கொண்டது மாதிரியாகவும் இருக்கும்.

"சமுதாயம்"